Free Circulation Germany- England

மணி: 75 - ஓசை: 343 சித்திரை. April 2025

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

31 TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# "உள்ளூராட்சி மன்ற தேர்தல்" தமிழர்கள் முன்னுள்ள சவால்

கொழும்பிலிருந்து... என்.அசோக்

## AI எழுதும் கட்டுரைகள்



## பெண்களின் பாரிய பிரச்சினைகள்



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

இதழ்: 343



## காசு என்ன நிறம்






# காசு என்ன நிறம்

## எமது வயதிற்கு கட்டாயம் உறைப்பு இல்லாமல் ஊர் சுற்ற முடியாது



● மாதவி

**பாலி** நகரில் ஒரு வீதி, இந்திய உணவகம் அந்த வீதியில் இரண்டு மட்டுமே உண்டு. காசு மாற்றும் ஆழநெல ஊாயபெந இடம் முழத்திற்கு முழம் உண்டு. எந்த பெரிய நட்சத்திர விடுதியில் இருந்தாலும் எமக்கு காசு மாற்றவும், நாக்குச் செத்துபோகாமல் இருக்கவும் வெளியே வந்துதான் ஆக வேண்டும்.

அதுவும் எமது வயதிற்கு கட்டாயம் உறைப்பு இல்லாமல் ஊர் சுற்ற முடியாது.

நானும், மனைவியும், எமது நீண்ட நாள் நண்பர் ஒவர் குடும்பமும் பாலியைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறோம். காலை உணவு ஸ்டார் ஹோட்டல், மதிய உணவு சுற்றும் இடங்களில் உள்ள தெருக் கடை இளநீர் வழுக்கல் தேங்காய். இரவு வந்தால் இந்திய உணவகம்.



எம்மோடு கூட வந்தவர்களுக்கு சற்று தடிமன். உணவை சுவைத்து உண்ண மனம் இல்லை, அதனால் எம்மை சென்று வாருங்கள் என்றனர். நானும், மனைவியும், வெளியே நடந்து, இந்திய உணவகத்தில் இரவு உண்ணச் சென்றோம். செல்லும் வழியில் ஒரு பேக்கறி வாசம் வர நான் உள் நுழைந்து பார்த்தேன். சுடச் சுட கொசோன் (croissants) எடுத்து வைக்கிறார்கள். அட நண்பருக்கு தடிமன் இது என்றாலும் இரண்டு வாங்கி கொடுப்போம் என வாங்கினேன்.

ஏன் மனைவி கூறினா'நாம் இந்திய உணவகம் சென்று உண்டபின் இந்தக் கோசோனை கொண்டுபோய்க் கொடுத்தால் சூடு ஆறிப்போடும்' என்றா. நான் தெருவில் இந்தக் கடைக்கு முன்னால் நிற்கிறேன் நீங்கள் கொடுத்திட்டு வாங்கள் என்றா.

நான் மனைவியை கடைக்கு முன்னால் தெருவில் விட்டு விட்டு நண்பருக்கு சுடச் சுட உணவு கொடுக்க விறு விறு என்று நடந்தேன். ஹோட்டல் வாசலில் தெருவில் வந்த ஒரு 40 வயது இளைஞர் ஏதோ உதவி கேட்க என்னை நெருங்கினார்.

'இங்கு எங்கு இந்திய உணவகம் உண்டு' என்று கேட்டார். நான் ' 300 மீற்றர் நேரே நடவுங்கள்' என்றேன். அவர் தான் துபாயில் இருந்து வந்துள்ளேன் என்றார்.

' நீங்கள் எந்த நாடு' என்றார்.

நான் இலங்கை என்றேன்.

உடன் அவர் நான் 'நாளை இலங்கை செல்கிறேன், பயணம் எவ்வளவு நேரம்' என்றார். நான் 6 மணிநேரம் என்றேன். உடன் ஒரு டொலர் இலங்கையில் எவ்வளவு என்றார். நான் நண்பனுக்கு உணவு சூடு ஆறப் போகுது என்ற அவசரத்தில் கிட்ட முட்ட சொல்லிவிட்டு நகர்ந்தேன்.


அப்போ உடன் கேட்டார் 'காசு மாற்றும் இடம் அது இங்கே எங்கே உண்டு' என்றார். நான் அந்த இடமும் நான் காட்டிய இந்திய உணவகம் பக்கமே என்றேன். மன்னிக்கவும்

07 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 343



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# "உள்ளூராட்சி மன்ற தேர்தல்" தமிழர்கள் முன்னுள்ள சவால்

கொழும்பிலிருந்து...
என்.அசோக்

இலங்கையில் புதிய ஆட்சி மலர்ந்து 6 மாதங்கள் நெருங்குகிறது.இந்த ஆறு மாதங்களில் இலங்கையர்கள் குறிப்பாக மாற்றத்தை விரும்பியவர்கள் (பெரும்பான்மையான சிங்கள மக்கள் மற்றும் சொற்பளவிலான தமிழ் மக்கள்) பெற்றுக்கொண்ட நன்மைகள் என்பது வெகு குறைவானதே. சுதந்திரம் கிடை த்து 78 வருடங்களில் இந்த நாட்டை ஆட்சி செய்த அனைத்து தரப்புகளும் செய்த வரலாற்று தவறுகளின் பாடங்களும் நாட்டின் மக்களை ஏமாற்றி ஏமாற்றி செய்துவந்த ஆட்சிகளும் அதேபோல், நாட்டையும் மக்களையும் சுரண்டி சுரண்டி நாட்டை வங்குரோத்தாக்கிய காரணங்களுமே ஒரு மாற்றத்துக்கு இலங்கையர்கள் அணி திரண்டார்கள்.அந்த அணி திரள்வின் பயனாக ஆயுதமேந்தி நாட்டில் பல வன்முறைகளுக்கும் கொலைகளுக்கும் காரணமான ஒரு அணியை தெரிவு செய்யவேண்டிய கட்டாயத்துக்கு இலங்கையர்களில் பெருமளவானோர் தள்ளப்பட்டார்கள்.அந்த பெருமளவானோர் என்போர் விரும்பி இந்த ஆட்சியை ஏற்படுத்தியிருப்பார்கள் என்று நினைப்பதற்கு எந்த காரணங்களும் இருக்கவில்லை. அவர்கள் அனைவருக்கும் இருந்த ஒரே தெரிவு இத்தரப்பு (தேசிய மக்கள் சக்தி-ஜே.. வி.பி.)மாத்திரமே இதுவரை இந்த நாட்டை ஆண்டிருக்கவில்லை.ஆகவே அவர்களுக்கு "ஒரு தடவை கொடுத்து பார்ப்போம்" என்றே தெரிவு மாத்திரமே இருந்தது.




அந்த வெற்றிடத்தை, அதாவது மக்கள் மத்தியில் இருந்த "அடுத்த ஆட்சி யாருக்கு" என்ற குழப்பமான வெற்றிடத்தை நிரப்புவதற்கு முனைந்தவர்களே இன்றைய ஆட்சியாளர்கள். அவர்களுடைய தேர்தல் பரப்புரைகள் அனைத்தும் முன்னைய ஆட்சியாளர்கள் செய்த தவறுகளையும் ஊழல்களையுமே பிரதானமாக கொண்டிருந்தது.2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக விரக்தியில் இருந்த மக்களுக்கு "பூஸ்ட்" கொடுப்பதாக ஜே.வி.பி. அதாவது தேசிய மக்கள் சக்தியின் பேச்சுக்கள் அமைந்தன.அதனால் ஆறுதல் அடைந்த மக்கள் "மாற்றம்" ஒன்றுக்கு தயாரானார்கள். அதனை செய்தும் காட்டினார்கள்.ஆனால், இந்த ஆறு மாதங்களில் அரசாங்கம் நம்பி வாக்களித்த மக்களுக்கு எதனையும் செய்யவில்லை,மாறாக இந்த நாட்டில் ஆட்சியாளர்கள் மாறும்பொழுது முன்னைய ஆட்சியாளர்களை பழிவாங்கும் வழமையான செயற்பாட்டையே முன்னெடுக்கிறார்கள் என மக்கள் அதிருப்தி நிலையில் இருக்கும் ஒரு சூழலில்தான் நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்த உள்ளூராட்சி சபைக்கான தேர்தலுக்கு இலங்கையர்கள் முகம்கொடுக்க இருக்கிறார்கள்.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தமிழ் மக்கள் எவ்வாறு முகம்கொடுக்க போகிறார்கள்?,தமிழ் தலைமைகள் இந்த தேர்தலுக்கு எவ்வாறு தயாராகப்போகிறார்கள்? என்பது மிக முக்கியமான கேள்விகளாகும்.காரணம்,யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்திருக்கும் சூழலில் அதனுடைய வடுக்கள் இன்றும் தமிழ் மக்களுடன் ஒட்டிக்கொண்டே இருக்கிறது. அதனை தாண்டி தமிழர் தாயகம் மறைமுகமாக பல சூறையாடல்களை எதிர்கொண்டுவருகிறது.குறிப்பாக நில அபகரிப்பு, கலை-கலாசாரா-பண்பாட்டு அழிவுகள் மறைமுகமாக இன்றும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது. இவ்வாறான ஒரு சூழலில் எதிர்வரும் தேர்தல்களில் சிங்கள தரப்புகள் தமிழர் தேசங்களில் வெற்றிபெறுவது என்பது மிகப்பெரும் ஆபத்தை இன்னும் சில வருடங்களில் ஏற்படுத்திவிடும்.



தேர்தல் பரப்புரையின் போது, ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளாக இருக்கும் அரசியல் கைதிகளுடைய விடுதலை, காணி விடுவிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என தற்போதைய அரசாங்கம் கூறியிருந்தது.ஆனால்,அதற்கான எந்த முன்னெடுப்புகளை ஆகக்குறைந்தது பேச்சில் கூட அரசாங்கம் தவிர்த்துவருகிறது. அதற்கு மாறாக பலர் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் தொடர்ந்தவண்ணமுள்ளது.

எனவே தமிழ் மக்களும் தமிழ் தலைமைகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் சிந்தித்து தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறார்கள். நீண்டகாலமாக தமிழ் தலைமைகளின் ஒற்றுமை தொடர்பில் பல்வேறு தரப்புகளாலும் சர்வதேச நாடுகளாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால்,அந்த சூழல் இன்றும் கேள்விக்குரியதாகவே இருக்கிறது.மக்கள் நல அரசியலுக்கு பதிலாக சுயநல அரசியலுக்கே தமிழ் தலைமைகள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.நீண்ட போராட்டத்தை அனுபவித்த ஒரு இனத்தின் அரசியல் எவ்வாறு

08 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# ஐரோப்பிய கலைமரபில் உடலும் நிர்வாணமும்

ஐரோப்பிய ஓவிய மரபில் கிரேக்க சிற்பங்கள் முன்மாதிரியானவை. கி.மு ஆண்டுகளுக்கு முன்னரேயே அதில் சாதனைகள் படைத்தார்கள். மனித உடலைப் பேசுபொருளாக்கி அவர்கள் உருவாக்கிய ஓர் மரபு சிற்பக் கலையை இன்றுவரை ரசிக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பாவில் 15 ம் நூற்றாண்டில் வீறு கொண்டெழுந்த மறுமலர்ச்சிக்காலத்தில் சிற்ப - ஓவியத்துறையில் மனித உடல் குறித்த நுணுக்கப்பார்வை மீண்டெழுந்தது. அதன் விளைவாக மருத்துவத் துறையில் கூட மனித உடல்களின் உள்ளுறுப்புகளின் இயக்கம் குறித்த தேடலில் ஓவியர்கள் கிறிஸ்தவ மதபீடங்களின் தடைகளை மீறி ரகசியமாக உடல் கூறுகளை வரைந்தார்கள். இன்றைய நவீன மருத்துவத் துறையின் வளர்ச்சி இங்கிருந்தே ஆரம்பித்தது.



T.சௌந்தர்
(இங்கிலாந்து)

அந்த மரபை ஒட்டி கலைக் கல்லூரிகளில் மனித உடல்களை வரைவது ஓர் மரபாக பின்பற்றப்பட்டு வருகிறது. சிற்பம், ஓவியம் , மட்பாண்டம் - ஆடைவடிவமைப்பு போன்ற துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு அடிப்படையான வரையும் ஆற்றலை வளர்ப்பதற்கு மனித உடல்களை வரையும் முறை பயிற்றுவிக்கப் படுகிறது. நிர்வாணமான உடல்கள் தான் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது. கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் வரைவதற்காக நிர்வாணமாக நிற்க ஆண் - பெண் மாடல்களை வெளியிலிருந்து வரவழைப்பார்கள். சில மாணவர்கள் தங்களுக்கான செலவுகளை சமாளிப்பதற்காக தாமே முன்வந்து நிர்வாணமாக நின்று தமது வருமானத்தை ஈட்டுவார்கள். அந்த வகையில் ஐரோப்பிய நகரங்களிலெல்லாம் நிர்வாணக் சிலைகளை நாம் மிகச் சாதாரணமாகக் காணலாம். உடலை காட்டுவது ஐரோப்பிய கலாச்சாரத்தில் குற்றம் அல்ல. அனால் மிகப் பழமையான பண்பாடு - நாகரீகம் என்று சொல்லப்படுகின்ற இந்திய - இந்து - தமிழ் கலாச்சாரத்தில் இது கேலிக்குரியதாக கருதப்படுகிறது.



நோர்வே நாட்டில் உள்ள வீலன்ட் பார்க் [ Vigeland Park ] என்று அழைக்கப்படும் நிர்வாணக் சிலைகள் நிறைந்த பூங்கா , வெளிநாட்டு சுற்றுலா விரும்பிகள் பார்க்கும் ஓர் முக்கிய இடமாகக் கருதப்படுகிறது. அவை Gustav Vigeland என்ற நோர்வே நாட்டு சிற்பி ஒருவரால் தனியே வடிக்கப்பட்ட சிலைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அதையொட்டி ஒரு மியூசியமும் உண்டு.

நோர்வே நண்பர் ஒருவர் கூறினார் தமிழர்கள் அதை தூசணப் பார்க் என்று அழைப்பார்களாம்.

தங்களுக்கு புரியாததை எல்லாம் ஏதோ சொல்லி தமக்குள் மறைவாக தற்பெருமை பேசும் ஒரு கூட்டமாக இருப்பது வேடிக்கை தான்! இனிவரும் சந்ததி இவற்றை கடந்து விடும்!

பி.குறிப்பு: பல நூற்றாண்டுகளுக்கு முன்தாகவே இந்தியக் கோவில்களில் நிர்வாணச் சிற்பங்கள் பல நிலைகளில் அமைக்கப்பட்டு இருந்தன. அவை இன்றும் உள்ளன. அதனுள் பல உள்ளர்த்தங்கள் உண்டு எனக் கடந்தும் செல்கின்றோம். ஆ.ர்




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# ஏன் வாங்குகின்றோம்? எதற்காக வாங்குகின்றோம்?

பிரியா இராமநாதன்
(இலங்கை)

சர் சர் என்று அடிக்கடி ஏறும் விலையுயர்வும், அதிகப்படியான பணவீக்கமும் காணப்படும் இன்றைய காலகட்டத்தில் பொருட்களை வாங்கும் திறன் இதுவரை இருந்திராதளவுக்கு மிகவும் முக்கியமானதாய் கருதப்படுகின்றது. தேசத்துக்குத் தேசம் பொருட்களின் விலை அச்சுறுத்துமளவுக்கு உயர்ந்துவிட்டிருக்கிறது, எதிர்காலத்தில் விலைகளில் சரிவு ஏற்படும் என்று எள்ளளவும் எதிர்பார்ப்பதற்கில்லை. அநேக குடும்பங்களில் செலவை சமாளிப்பதற்கு கணவன் மனைவி இருவருமே வேலை செய்யவேண்டியதாயிருப்பதுடன், மேலதிக வருமானத்திற்காக இன்றெல்லாம் பலரும் முதலீடுகள், பகுதிநேர வேலைகள் என செய்வதும் அதிகரித்துள்ளது.

வரவுக்கு மீறி செலவு செய்வது நம்மை கடன் பொறியில் சிக்க வைக்கும் என்பதுதான் அனுபவ உண்மை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான் வருமானம் அதிகரிக்கிறது. ஆனால், பொருள்களின் விலையோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்த நிலைமையை சமாளிக்க ஒவ்வொருவரும் ஒரு வழிமுறைகளை கடைபிடிக்கின்றனர். சிலர் செலவுகளை கட்டுப்படுத்துகின்றனர், சிலர் சேமிப்பை குறைக்கின்றனர், சிலரோ செலவுகளைக் குறைக்காமல் கூடுதல் நேரம் உழைத்து வருமானத்தை அதிகரித்துக் கொள்கின்றனர். தவிர்க்க முடியாத அத்தியாவாசிய செலவுகளைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நம்மையும் அறியாமல் அல்லது திட்டமில்லாமல் செய்கின்ற செலவுகளை தவிர்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு மிகப்பெரிய மனோதிடம் வேண்டும் என்பதுதான் உண்மை. ஏனெனில் ஒன்றை வாங்கச் செல்லும் நமக்கு கண்ணில் படும் இன்னொன்றையும் வாங்கும் ஆசை அதிகமாகவே எழுவது யதார்த்தம்தான் இல்லையா? குறித்த அந்த பொருள் ஏதாவது ஒரு தேவைக்காக நம்மை




வாங்கத்தூண்டுவதாக நம் மனம் நம் ஆசையை தூண்டும். அதிலும் குறிப்பாக குழந்தைகளை நம்முடன் அழைத்துச் சென்றிருந்தால் சொல்லவே வேண்டாம்! டிவியில் அல்லது மொபைலில் தாங்கள் பார்த்ததை வாங்குவதற்கு அவர்களது மூளை அவர்களை உந்தித்தள்ளும்.

அதற்கேற்றாற்போல கடை வாசலில், பில் கவுண்டரில் பிள்ளைகளே கைநீட்டி எடுத்துக்கொள்வதற்கு வசதியாக வைக்கப்பட்டிருக்கும் அவசியமில்லாத விளையாட்டு பொருட்களையும், வேண்டாத உணவுவகைகளையும் வாங்கிக் கொடுக்கும் நிர்பந்தத்திற்கு பெற்றோர்கள் ஆளாவதுண்டு.குழந்தைகள் கேட்பதையெல்லாம் வாங்கிக்கொடுத்தாலோ அல்லது பாக்கெட் மணி கொடுத்துப் பழக்கினாலோ அவர்களுக்கு ஆன்லைன் ஷாப்பிங் மேனியா எனப்படும் பிரச்சினை ஏற்படுமாம். அதாவது இன்றைய குழந்தைகள் அதிகப்படியான ஸ்மார்ட் போன் பாவனையாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு இந்த விளைவு ஏற்பட அதிகளவில் வாய்ப்புள்ளது. அதிகப்படியாக பொருட்களை வாங்கிக்குவிப்பதென்பதனை ஓர் மனநலப் பிரச்னையாக இப்போது ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஓனியோமேனிய (Oniomania) அல்லது கம்பல்ஸிவ் பையிங் டிஸ்ஆர்டர் (Compulsive buying disorder-CBD) என இந்த மனநலப்பிரச்சினை அடையாளப்படுத்தப்படுகின்றது. கடைகடையாக ஏறி இறங்கி விலை விசாரித்து வாங்கும் வழக்கங்கள் இப்போது அரிதாகி door delivery செய்யப்படுவது, பணத்தை கையால் எண்ணி செலவழிக்காமல் Credit card debit caசனல் swipe செய்வது போன்ற நடவடிக்கைகளினால் கண்ணுக்கு தெரியாமலேயே நம்முடைய செலவுகள் அதிகரித்துள்ளன.


பிரியா இராமநாதன்
(இலங்கை)

எனவே பொருட்களை எப்படி, எங்கே, எப்பொழுது வாங்க வேண்டும், நம்முடைய பணத்தை அதிக விவேகத்துடன் செலவு செய்வது எப்படி என்பதைத் தெரிந்திருப்பது அதி முக்கியம்! அநேக நேரங்களில், நாமெல்லாம் மலிவானவை, தள்ளுபடி போட்டிருக்கிறார்கள் என தேவையோ இல்லையோ பொருட்களை வாங்கிக் குவிப்பதுண்டு.



இந்தத் தள்ளுபடிப் பொறிகளில் சிக்கும்போது, இந்தப் பொருட்களை ஏன் வாங்குகிறோம் என்பது குறித்த சிந்தனை தள்ளிப்போய், அடுத்த விற்பனை எப்போது வரும்? எவ்வளவு தள்ளுபடியில் வாங்கலாம்? என்பதில் கவனமாக இருப்போம். ஆனால் இந்த “sale option“ என்பதை நாம் சரியாக பயன்படுத்துகிறோமா இல்லையா என்பது கேள்விக்குறியே! எல்லா அங்காடிகளிலும் கழிவுத் தள்ளுபடி (Clearance sale) என்று விரைவில் கெடக்கூடிய பொருட்கள், கடையில் நீண்ட காலம் தங்கிவிட்ட பொருட்களை அதிக கழிவு விலையில் விற்பனைக்கு வைத்திருப்பர். அந்த பகுதிக்கு சென்றால், அவசியமில்லாத பொருட்களை வாங்க நேரிடலாம். எனவே நமக்கு தேவையில்லாதவிடாது நாம் அவற்றை கடந்து சென்றுவிடுவது நமக்கு நல்லது.

மாதத்திற்கான மளிகைப் பொருட்களின் பட்டியலை தயார் செய்து, மளிகைக் கடைக்கு சென்று வாங்கும்போது நிச்சயமாக பணத்தை மிச்சப்படுத்தலாம் என்பது அநேகர் அறிந்த உண்மை. ஏனெனில் சூப்பர் மார்க்கெட்டுகளில் அடுக்கடுக்காக பல்வேறு பிராண்டுகளில் பொருட்களை பார்த்து வாங்குவது வசதியாக உள்ளது என்றாலும், பார்க்கும் பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிக்கும் பழக்கமும் தேவையில்லாதவற்றை வாங்கிக்கொள்ளவேண்டும் எனும் உந்துதலும் இந்த சூப்பர் மார்கெட் கலாசாரத்தால் பெருகிவிட்டது என்பதால் முடிந்தவரை சூப்பர் மார்க்கெட் கொள்முதலை தவிர்ப்பது, ஒவ்வொரு மாதமும் பட்ஜெட் போடுவதற்கு முன் கடந்த

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும்
சித்திரை திருநாள்
வாழ்த்துக்கள்
Luckyfly
Luckyfly
SRI LANKA
Summer 2025
DREAM VACATION
AB 1080 €
0234 2399032
0179 14 84892
info@lucky-fly.de | www.lucky-fly.de
BOOK NOW

# பேசும் படம்



எல்லா இடமும் காசு கட்டியிட்டம்...
எல்லா இடமும் வெல்லிறம்...
எல்லா இடமும் எல்லாரும்
காசைத்தந்திடுங்கோ...



ஒரு மாதிரி பட்டியல்
வேலை முடிஞ்சுது....



அனிதாவோ சுனிதாவோ வில்லியம்ஸ்ஸை
விட எங்கட கீர்த்தி சுரேஷ் எவ்வளவு பெரிய
ஆள். அவ விண்ணில இருந்து மண்ணுக்கு
வரேக்கை ஒரு யூ ரியூப்பர்மாரும் அங்கை
இல்லை.. ஆனால் எங்கட கீர்த்தி சுரேஷ்
கொழும்புக்கு வரேக்க எத்தினை யூரியூப்காறர்
நிண்டாங்கள் தெரியுமே.. இப்ப
விளங்குதே ஆர் பெரிய ஆள் எண்டு....
அன்னம்மா குஞ்சாச்சி



இண்டைக்கு
என்னத்தைப்
பேசலாம்...

இலங்கையில்
இன்று குரங்கு
பேசுபொருள்



நான் சோறே தின்னிறது
இல்லைத் தெரியுமோ



கெதியா
எண்ணுங்கடா....
இப்பிடியே
எவ்வளவு
நேரம்
எண்டு
இருக்கிறது...

காரைக்கவி

# காசு என்ன நிறம்

20 டொலர் என்ன நிறம் இருந்தால் காட்டவும், என்னிடமும் இருக்கு சரிபார்க்க என்று சொல்லி தனது பேச்சை நிறுத்தி, நான் காசெடுத்து காட்டப்போகிறேன் என்ற ஆவலோடு என் கரங்களை பார்த் தவண்ணம் நின்றார்.

நான் சட்டென என்னை சுதாரித்து கொண்டு நண்பனிடம் ஓடிச் சென்று சுட சுட உணவைக்கொடுத்துவிட்டு திரும்பினேன்.

அப்பதான் அட மனைவியை தெருவில் விட்ட ஞாபகம் வர ஓட்டமும் நடையுமாக சென்றேன்.

என்னிடம் காசின் நிறம் கேட்டவர் மனைவியை நிற்கச் சொன்ன பக்கத் தால் திரும்ப வந்துகொண்டு இருந்தான். மனைவியை தெருவில் காணவில்லை.

அவ பாதுகாப்பா துணிக் கடைக்குள் எந்த நிறம் பேத்திக்கு நல்லது என்று பார்த்தபடி நின்றா. அவன் மறு முனையில் வேறுயாரி டம் காசின் நிறம் கேட்கலாம் என்று நடந்து கொண்டு இருந்தான்.

மறு நாள் நண்பர் குடும்பம் சுகமாக இரவு உணவுக்கு வெளியே சென்று திரும்பி னோம். அப்போது ஒரு ஆணும் பெண்ணும் காரில் எம்முன் வந்து இறங்கி எம்மிடம் இந்திய உணவகம் எங்கே உண்டு என்று



கேட்டனர். தாம் தூபாயில் இருந்து வந்துள் ளோம் என்றனர். அடுத்து நாம் இலங்கை நாளை செல்கிறோம். என்றனர். ஒரு டொலர் இலங்கையில் எத்தனை ரூபாய் என்றனர்.

எமக்கு லீக்கான எக்ஸாம் பேப்பர் போல் இருந்தது அவர்கள் கேள்விகள்.

நான் சற்றும் அவர்கள் எதிர்பார்க்காத நிலையில் ‘உங்கள் டொலர் என்ன நிறம்‘ என்றேன். அவர்கள் முகம் நிறம்மாறி வெளுத்து விட்டது.

கவனம் நீங்கள் பேச்சைத் திறந்து காசின் நிறம் காட்டும்போது , அவன் நல்லவன் என்ற நிறம் மாறிவிடும்.

விடுமுறைக்கு எங்கு சென்றாலும் நம்ப நட, நம்பி நடவாதீர்கள்.

எவர் மறித்தாலும் நின்று
கண்பார்த்து கதைக்காதீர்கள்.

காதலுக்கு மட்டுமல்ல, திருடனும் கண்வழியேதான் புகுவான்.

கண்டவன் நிண்டவன் எல்லாம்
உங்கள் காண்டம் வாசிப்பான்.

பி குறிப்பு. துபாயில் இருந்து வந்தவன் என்று சொன்னவர் பாலி நாட்டவர் இல்லை. ஆனால் எவராக இருந்தாலும் நாம்தான் அவதானமாக இருக்கவேண்டும்.






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு பத்திரமாக திரும்பினார்: ஒன்பது மாதங்களுக்கு பிறகு ஒரு வெற்றி

மார்ச் 18, 2025 அன்று காலை 10:35 IST மணிக்கு ISS-லிருந்து பிரிந்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம், 17 மணி நேர பயணத்துக்குப் பிறகு, இன்று அதிகாலை 3:27 IST மணிக்கு புளோரிடா கடற்கரையில், தல்லாஹாஸ்ஸி அருகே தண்ணீரில் தரையிறங்கியது.

இதில் சுனிதா, புட்ச், நாசா விண்வெளி வீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்ஸாண்டர் கோர்புனோவ் ஆகியோர் பயணித்தனர். விண்கலம் பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையும்போது 3,000 டிகிரி / பாரன்ஹீட் வெப்பத்தை தாங்கி, பாராசூட் மூலம் பத்திரமாக இறங்கியது. தரையிறங்கியவுடன், சுனிதா புன்னகையுடன் கையசைத்து,நலமாக இருப்பதை உறுதிப்படுத்தினார். அந்த தருணத்தில், விண்கலத்தைச் சுற்றி நீந்திய டால்பின்களைப் போல, நமது இதயங்களும் மகிழ்ச்சியில் துள்ளியது. இது அவர்களின் நீண்ட, சவாலான பயணத்துக்கு ஒரு மகிழ்ச்சியான முடிவைத் தந்திருக்கிறது.



**அடுத்த கட்டம்:**

286 நாட்கள் புவியீர்ப்பு இல்லாத விண்வெளியில் இருந்ததால், சுனிதாவும் புட்ச்சும் பூமியின் புவியீர்ப்புக்கு மீண்டும் பழக 45 நாள் மறுவாழ்வு (rehabilitation) திட்டத்தில் பங்கேற்பார்கள். இதில் எலும்பு பலவீனம், தசை இழப்பு, பார்வை மங்குதல் போன்றவற்றை சரிசெய்யும் பயிற்சிகள் இருக்கும். நாசாவின் கூற்றுப்படி, இவர்கள் நல்ல உடல்நிலையில் திரும்பியிருக்கிறார்கள், ஆனால் மருத்துவ பரிசோதனைகள் தொடரும்.

இந்த வெற்றிகரமான திரும்புதல், நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களின் தொழில்நுட்ப திறனுக்கு சான்று. ”வாக்கு கொடுத்தோம், வாக்கை நிறைவேற்றினோம்” என்று அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்திருக்கிறது. சுனிதாவின் இந்த சாதனை, உலகெங்கிலும் உள்ள விண்வெளி ஆர்வலர்களுக்கு ஒரு பெரிய உத்வேகமாக அமைந்திருக்கிறது.

# “உள்ளூராட்சி மன்ற தேர்தல்” தமிழர்கள் முன்னுள்ள சவால்

இருக்கக்கூடாதோ அதற்கு சிறந்த உதாரணமாக தமிழ் தலைவர்கள் கடந்த 16 வருடங்களாக செயற்பட்டுவந்திருக்கி றார்கள். அதனுடைய தாற்பரியம் எத்தகைய கறுப்பு வரலாறுகளை பதிந்திருக்கிறது என்பதை தமிழர் தாயகம் மீது பற்று வைத்துள்ளவர்களுக்கு நன்றாக புரியும்.

பல இழப்புகளை சந்தி த்த ஒரு இனத்தின் அரசியல் பயணம் -பல அழிவுகளை சந்தி த்த ஒரு இனத்தின் அரசியல் பயணத்தில் பக்குவம் இருந்திருக்க வேண்டும், இராஜ தந்திரம் இருந்திருக்க வேண்டும்,சர்வ தேசத்துடன் சிறந்த உறவு இருந்திருக்க வேண்டும்.ஆனால் இவை எவற்றையும் பொருட்படுத்தாமல் சில்லறைத்தனமான அரசியல் செய்த தலைவர்கள் நிச்சய மாக தமிழினத்தில் மாத்



திரமே இருக்கி றார்கள்.இந்த நிலைமை மாறவேண்டும்.அந்த மாற்றம் ஒன்றே போராடிய-போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு இனத்துக்கு விடிவை ஏற்படுத்திக் கொடுக்கும்.ஆகவே எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் இருந்தாவது புதியதொரு பயணத்துக்கு தமிழ் தலைமைகள் என்று கூறிக்கொள்வோர் தயாராக வேண்டும்.

சுயநல அரசியலுக்கு முற்றுப் புள்ளிவைத்துவிட்டு-தலைமை போட்டிக்கான அரசியலை உதறித் தள்ளிவிட்டு இரத்தம் தோய்ந்த மண்ணுக்கான விடுதலை பயணத்தினை தொடர்ந்து முன்கொண்டு செல்லும் வகையிலான ஒரு அரசியல் தெரிவிக்கு தமிழ் தலைமைகள் முன்வருவது காலத்தின் தேவையாகும்.

அந்த அடிப்படையில் கடந்த கால தவறுகளை உணர்ந்து ஒரு கூட்டு செய ற்பாட்டுக்கான களம் அமைக்கப்படுவது அவசியம்.அதற்கான களமாக இந்த தேர்தலை பயன்படுத்துவது அவசியமாகும்.தமிழ் தலைமைகள் எவ்வாறு சிதறுண்டு இருக்கிறார்களோ அதேபோல், இன்று தமிழ் மக்களும் பல திசைகளாக சிதறுண்டு இருக்கி றார்கள்.இவர்களை ஒன்றுதிரட்ட வேண்டிய கடமை தமிழர்கள் மத்தியில் வாழ்கின்ற புத்திஜீவிகளதும் சமூக செயற்பாட்டாளர்களதும் கடமையாகும்.அது ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவரப்படுவது அவசியமாகும். சிங்கள மக்கள் எப்படி ஒரு மாற்றத்துக்கு தயாரானார்களோ அதேபோல்,தமிழ் மக்களும் ஒரு மாற்றத்துக்கு தயாராகவேண்டும். அந்த மாற்றத்துக்கான களத்தை ஏற்படுத்தவேண்டிய தார்மீக கடமை மண் மீதும் மொழி மீதும் பற்றுக்கொண்டு செயற்படும் செயற்பாட்டாளர்களுடைய கடமையாகும். அரசியல்வாதிகளின் கையில் இருந்து தமிழரின் அரசியல் ஒரு அறிவுபூர்வமான போராட்ட குணமிக்க மண் மீதும் மொழி மீதும் பற்றுள்ளவர்களின் கைகளுக்கு செல்வதே அடுத்த கட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பொருத்தமாக இருக்கும். எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை இத்தரப்புகள் எவ்வாறு சந்திக்க போகின்றன?மக்களை எவ்வாறு அணிதிரட்டப்போகின்ற?தமிழ் தலைமைகளை எவ்வாறு ஓரணியில் திரடப்போகின்றன?என்பதிலேயே எதிர்கால தமிழருடைய இருப்பும்-எதிர்கால ஆரோக்கியமான முன்னெடுப்புகளும் கடந்தகால அழிவுகளுக்கான தீர்வும் அமைந்திருக்கிறது.




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# என்ரை ஆச்சி



**காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**

இண்டைக்கு விடியக்காலமை வெள் ளவத்தைக்குப் போன இடத் தில என்ரை கூட்டாளி ஒருத் தனைக் கண்டனான். வழக்கமா என்னைக் கண்டா பழைய அரசியல்வாதி மாதிரி வளவளவெண்டு கதைப்பான். ஆனா இண்டைக்குப் பேசாம நிக்க என்னடா உன்ரை வீட்டம்மா வழக்கம்போல உன்னை வெருட்டிப்போட்டாவோ எண்டு கேட்டன்.

என்னண்ணை நீங்க எனக்குச் சரியான பல்லுக்கொதி கதைக் கேலாம இருக் கெண்டான்.

நான் அட..அப்படியே சங்கதி ...நீ .ஒவ் வொரு சனியும் நல்லெண்ணை வைச்சுத் தோயிறனிதானே எண்டன்.

என்னண்ணை பகிடியே விடுறியள் இஞ்சை இருக்கிற வேலையளுக்கு நல்லெண்ணை வைச்சுத் தோஞ்சு மினக் கெடேலுமே. சம்போ வைச்சுத்தான் தோயிற னான் அண்ணை எண்டான்.

நான் அவனிட்டை எட பேயா நல்லெண்ணெய் வைச்சு ஒவ்வொரு சனியுந்தோஞ்சா உந்தப் பல்லுக்கொதி கண்குத்து காது குத்து மண்டை இடி ஒண்டும் வராதெல்லே எண்டன்.உதைத் தானே அவ்வையார் சனி நீராடு எண்டு சொன்னவ தெரியாதோ எண்டன்.அதோட சாப்பாட்டுக்கும் நல்லெண்ணை சேத்தா சலக்கொதி மூலக்கொதி வயித்தெரிச்சல் சமியாக்குணம் மேலால கீழால போற வாய்வுப்பிரச்சினை கொலஸ்றோல் எண்டு ஒரு கோதாரியும் வராது எண்டன் . குத்த ரிசிச்சோறும் நல்லெண்ணை விட்டுக் குழைச்ச அம்மியில அரைச்ச இஞ்சிச் சம்பலும் அஞ்சாறு உரிச்ச சின்ன வெங்கா யம் தான் அடிக்கடி என்ரை மத்தியானச் சாப்பாடு.

சாப்பாட்டில நல்லெண்ணையும் நல்லெண்ணை முழுக்கும் எத்தினையோ விசயங்களுக்கு நல்லம் எண்டு என்ரை ஆச்சி சொல்லுறவ. அப்புவும் ஆச்சி யும் உந்த நல்லெண்ணைச் சாப்பாடும் தோய்ச்சலும் தவறாயினம். அவைக்கு கண்ட கிண்ட வருத்தம் வாதை ஒருநாளும் வரேல்லை. முழுக்கு அண்டைக்கு அப்பு விடியவே தலைக்கு கொஞ்ச எண்ணை வைச்சுக் கொண்டு ஆட்டிறைச்சிப்பங்கு வாங்கப் போடுவார். அப்பு இறைச்சியை வெள்ளணக் கொண்ணந்ததுமே ஆச்சி யும் தலையிலை வைச்ச கொஞ்ச நல்லெண்ணையோட இருந்து கொண்டு வந்த கறியை நோண்டிக் கழுவி கறிவைச்சு சோத்து உலையை வைப்பா.

பேந்து ரெண்டு பேரும் முத்தத்தில இருத்து ஆளாளுக்கு மாறி மாறி நல்லா எண்ணை பிரட்டித் தேய்ப்பினம் . அப்பு ஒரு கோமணம் கட்டி இருப்பார் ஆச்சி பாவாடையைத் தூக்கி இடைக்கட்டு கட்டியிருப்பா. உப்பிடி எண்ணை பிரட்டுறதைத்தான் இப்ப பொடி மசாஜ் எண்டுகினம், அதுமட்டுமே அதுக்கெண்டு காசையும் செலவளிக்கினம் . நல்லா எண்ணை பிரட்டித் தேச்ச பிறகு அப்பு சிரட்டையில கொஞ்சம் கறி எடுத்துக் கொண்ணந்து முத்தத்து வேப்ப மரத்துக்குக் கீழை வைப்பார்.

பேந்து காலமையே வாங்கியந்து வேலிக்கரை பூவரசுக்கு கீழை வைச்ச கள்ளுப் போத்திலை எடுத்தந்து மணலிலை இருந்துகொண்டு கள்ளைச் சிரட்டை யில ஊத்தி இறைச்சியையும் இடைக் கிடை சப்பிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமா வாயை சிரட்டையிலை பட்டும் படாம வைச்சுக்கொண்டு ரசி ச்சு ரசிச்சுக் குடிப்பார். அப்பு கள்ளுக்கு டிச்சுக்கொண்டு இருக்கேக்கை ஆச்சி செவ்வரத்தம் இலை இல்லாட்டில் முசுட்டை இலையோடை வெந்தயம் எல்லாம் எடுத்து சீயக்காயோட சேத்து பழைய உரலில இடிச்சு எடுத்து ஒரு சட்டியிலை போட்டு அதுக்குள்ளை பழங்கஞ்சியை விட்டுக்கலக்குவா. பேந்து அப்பு கள்ளுக் குடிச்சு முடிய ரெண்டு பேரும் கிணத்தடிக்குப் போ வினம். கிணத்தடிக்குப்போனா அப்பு ஆச்சிக்கு தண்ணி அள்ளித் தலையிலை ஊத்துவார். பேந்து அவவுக்கு சீயக்காயைப் பிரட்டித் தண்ணி ஊத்துவார். பேந்து ஆச்சி அப்புவுக்கு இதே மாதிரி சீயக்காய் பிரட்டித்தண்ணி அள்ளி ஊத்துவா.

பேந்து ரெண்டு பேரும் மாறி மாறி மூண்டு மூண்டு வாளி சோஞ் சொல்லி ஊத்தி தோஞ்சு முடிப்பினம்.சிவம்.. சிவம் ..எண்டிறதைத்தான் அவை சோஞ்..சோஞ்..எண்டிறவை. சிலர் சுகம் சுகம் எண்டிறதைத் தான் சோஞ்.. சோஞ்..எண்டிறவை எண்டுவினம் .பேந்து அப்புவின்ரை பழைய நாலு முழத்தால ரெண்டு பெரும் ஆளாளுக்கு மாறி மாறி ஈரந்துடைப்பினம். பேந்து ஆச்சி ஒரு சின்னப் பழஞ்சீலையை தலையில மயிரோட சேத்து முடிவா.பேந்து சாமி கும்பிட்டு முடிய அடுக்களைக் குந்-தில இருந்து இளச்சூட்டுச் சோத்தை ஆட்டிறைச்சிகறியோட சாப்பிட்டுப் போட்டு தலைவாசல் குந்தில நல்ல ஒரு நித்திரை அடிப்பினம்.

உண்ணாணச் சொன்னா உப்பிடி யான சாப்பாட்டு முறையால வாழ்க்கை முறையால அப்புவுக்கும் ஆச்சிக்கும் எப்பவும் காதலர்தினந்-தான். டேற்றிங் மேற்றிங் எல்லாம் ஒழுங்கா நாலு சுவருக்கை தாராள-மா நடக்கும். சிலவேளை பகலிலை என்னதான் சண்டை பிடிச்சினம் எண்டாலும் இரவிலை கப்சிப்.



## இலங்கைத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய ஜெர்மன் பெண்!

மாத்தளை மாவட்டத்தில் உள் ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜெர்மன் நாட்டவர் ஒருவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அந்தப் பெண் இலங்கை குடி யுரிமையைப் பெற்று தேர்தலில் போட்டியிட தகுதி பெற்றுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் பெண் ஒரு சுயே ச்சைக் குழுவின் வேட்பாளராக கலேவல பிரதேச சபைக்கு போட் டியிட உள்ளார்.

வைப்புத்தொகையை செலு த்திய பின்னர், இலங்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும் நம்பிக்கையுடன் தான் போட்டியி டுவதாக ஜெர்மன் பெண் ஊடகங் களுக்குத் தெரிவித்தார்.








அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




# யேர்மனியில் சிறப்பாக இடம்பெற்ற சர்வதேச பெண்கள் தின விழா

யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் சர்வதேச பெண்கள் தினம் (பங்குனி 08) டோட்மூண்ட் பெண்கள் மன்றத்தினரால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேற்படி நிகழ்வு அகவணக்கத்துடன் ஆரம்பமானது. நிகழ்ச்சி தொகுப்பு ராஜி அவர்கள் சிறப்புற வழங்கினார்.வரவேற்புரை குமுதா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து,சகனா அவர்கள்“ பெண்களுக்கான உரிமைகள் என்ன?“ என்பது பற்றி உரை நிகழ்த்தினார். அமரா ஶ்ரீதேவி, ஆகனா சகாதேவி, ஆகியோரது நடங்கள் பெரிதும் கவர்ந்தன. வெற்றிமணி பத்திரிகை, சர்வதேச பெண்கள் தினம் சிறப்பிதழில் வெளியான, கவிதா லட்சுமியின் ‘பெண்மை விலங்கில்“ என்ற கவிதை ஒன்று சிவவினோபன் சிவகிருஷ்ணநாதன் அவர்களால் அவையில் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து, அரசியல் ஆளுமைப் பெண்கள் படங்கள் திரையிட அவர்கள் பற்றிய உரையை முறையே மிதிலா – “தாய் இங்வென்“அன்னலஷ்மி–“2ம்எலிசபெத் மகாராணி“யோகா– “இந்திரா காந்தி“குமுதா– “மாகிறட் தச்சர்“தயா–“அங்கெலா மார்க்கெல்“பிரியா–“கமலா ஹாரீஸ்“றாஜி–“அம்மு சுவாமிநாதன்“ஆகியோரின் தனித்துவம் பற்றி எடுத்துரைத்தார்கள்.





விளையாட்டுக்களை தயா, மிதிலா,றாஜி மூவரும் சிறப்பாக பார்வையாளர்கள் மத்தியில் நிகழ்த்தினர். கவிதை நிகழ்வில், ஜெகதீஸ்வரி மகேந்திரன், யோகா, கலந்து சிறப்பித்தனர், அதனைத்தொடர்ந்து, உரை நிகழ்வு இல், இரவீந்திரன் தர்மலிங்கம், நேசக்கரம் சாந்தி, டயானி பாலேந்திரா, மீனா உதயகுமார், கரிணி. கண்ணன், கௌசி சிவபாலன், நகுலா சிவநாதன் சறோஜினிதேவி – தங்கரட்னம் சிறீஜீவகன் – பொன்னுத்துரை, சிவவினோபன் – சிவகிஷ்ணநாதன்,நடராஜா திருச்செல்வம், சபேசன் விமலசேகரன், தவம் ஆகியோர் உரை நிகழ்த்தினார்.

பட்டி மன்றம் : பெண்களின் உயர்வுக்குத் திருமணவாழ்க்கை சவாலா? சாதகமா? என்ற தலைப்பில் இடம் பெற்றது.

நடுவராக பொன்னையா – புத்திசிகாமணி அவர்களும், –திருமணவாழ்க்கை சவாலே“: என, நகுலா சிவநாதன், தேவராணி, ராஜகுலசிங்கம், சாந்தினி.துரையரங்கன் ஆகியோரும். –திருமணவாழ்க்கை சாதகம்“ என குமுதா மனோகரன், ரவீந்திரன் தர்மலிங்கம், ரவீந்திரன் வெற்றிவேலு, குழுவினரும் கருத்தால் மோதினர். சர்வதேச பெண்கள் விழா என்றால் பெண்களுக்கானது மட்டுமல்ல என்பதனை மெய்பிப்பதுபோல் கூட்டத்தில் ஆண்கள் பலர் கலந்துகொண்டதும் சிறப்பு. பல ஆண்டுகளாக இவ்விழா தொடர்ந்து தமிழர் அரங்கத்தில் இடம் பெற்று வருகின்றது. இவற்றை ஒழுங்கமைக்கும் பெண்கள் மன்றத்தினரை வாழ்த்துகின்றோம். நன்றியுரை தயா நிகழ்த்த விழா இனிதே நிறைவடைந்தது. சிற்றுண்டி, இராப்போசனம் வழங்கப்படது.



படங்கள் கஸ்தூரி



டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45 Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# இன்றைய சூழலில் பலரும் உடல் எடையைக் குறைப்பது பற்றி மட்டுமே பேசிக் கோண்டிருக்கிறார்கள்

**நீங்கள் எதை உண்ண வேண்டும், எந்த விதமான பயிற்சி வேண்டும் என்பதை உங்கள் உடல் தெள்ளத் தெளிவாகக் காண்பித்துக் கொடுக்கும்.**

**நாம்** hunter gatherer வாழ்க்கை முறையிலிருந்து விவசாயம் செய்து வாழும் முறைக்கு மாறி பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. எனவே முற்றிலும் புரதச்சத்து நிரம்பிய உணவை உட்கொள்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. தொடர் பேலியோ, கீட்டோ டையட் காலப்போக்கில் சிறுநீரகத்திற்கு அதிகப் பாரத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு. நம்முடைய மரபணுக்கள் நாம் வாழும் நிலத்தின் தட்பவெப்ப நிலைக்கும், அங்கே கிடைக்கும் உணவுப் பொருட்களுக்கும் தக்கவே அமைந்திருக்கும். இதுவும் ஒரு வகை எப்பிஜெனிடிக்ஸ் (Epigenetics). உலகமயமாகிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் பல விதமான உணவுப் பதார்த்தங்கள் நமக்குப் பரிச்சயமாகின்றன. எல்லாவற்றையும் உண்டு மகிழ்ந்து கொள்ளலாம். ஆகவே எதையும் தவிர்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உணவைப் பொறுத்தவரையில் அளவு மிகவும் முக்கியமானது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல எதையும் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடாமல், அதன் தன்மை அறிந்து சமச்சீரான nutrient சேரும் வண்ணம் சாப்பிட்டால் நல்லது.

ஒவ்வொரு நாளும் நாம் உட்கொள்ளும் உணவின் தன்மையையும் அதில் இருக்கும் நியூட்ரிஷனல் வேல்யூ பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். அது குறித்த அறிவியல் காணொளிகளைப் பாருங்கள். அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசியுங்கள். அவை ஓரளவு நம் உடலியங்கும் தன்மையைப் புரிந்து கொள்ள உதவும். அதற்குத் தக்க உணவை உண்பது சாலச் சிறந்தது. எனக்கு எந்தவித உணவு ஒவ்வாமைகளும் இல்லை. அதனால் எல்லாவற்றையும் (வெஜிடேரியன்) அளவாக உண்டு மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

அடுத்தது உடற்பயிற்சியைப் பற்றிச் சொல்ல வேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக நான் வாரத்திற்கு மூன்று




முறை ஜிம் செல்கிறேன். லேபில் மதிய உணவுக்காக ஒரு மணி நேரம் இடைவெளி கிடைக்கும். அதில் நாற்பது நிமிடங்கள் ஜிம்மிற்கு ஒதுக்கி வைத்திருக்கிறேன். (அதற்கு முந்தைய வருடங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் வெளியே ஓடிக் கொண்டிருந்தேன்) பெரிய பெரிய உடற்பயிற்சிகளை எல்லாம் செய்வதில்லை. என் உடலுக்கு எது பொருத்தமானதோ ஓரளவு அதைச் செய்து கொள்கிறேன். வாரத்திற்கு ஒரு முறை முடிந்த வரையில் ஓட்டம் கடைப்பிடிப்பதுண்டு. லிஃப்ட் உபயோகிக்கும் இடத்தில் அதைத் தவிர்த்து விட்டுப் படிகளை எடுத்துக் கொள்கிறேன். என்னுடைய வேலையில் இயல்பாகவே நிறைய நடக்க வேண்டியிருப்பதால் அதற்கென்று தனியாக நேரம் எடுத்துக் கொள்வதில்லை.

உணவைப் பொறுத்தவரையில் எல்லா உணவையும் நானே வீட்டில் சமைத்துத் தான் உண்கிறேன். அதற்கான காய்கறிகள் பழங்கள் வாங்குவதிலும், நல்ல தரமான மளிகை சாமான்களை வாங்குவதிலும் அதிகக் கவனம் செலுத்துவேன். சமைக்கும் போதும் மிதமான தீயில் அதிக எண்ணெய்யோ அல்லது அதிக வெண்ணெய்யோ சேர்க்காமல் பொறுமையாக நேரம் எடுத்துச் சமைப்பேன். பெரும்பாலும் frozen உணவுகளையும், ரெடிமேட் பொருட்களையும் தவிர்த்து விடுவேன் பொடியோ, இஞ்சி பூண்டு பேஸ்ட்டோ எல்லாமே வீட்டிலேயே நானே தயார் செய்து கொள்வேன். சமைக்கும் பாத்திரங்களிலும் கவனம் செலுத்துவேன்.



தீபா சீறிதரன்
(தைவான்)

பெரிய fancy பாத்திரங்களையெல்லாம் உபயோகிப்பதில்லை. Non-stick அதிகம் உபயோகிப்பதில்லை. பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவுதல் எனக்கு மிக முக்கியம். அடுத்து வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் எனக்கு அதிக நேரம் செலவாகும். ஒரு நாளைக்குச் சமையல் மற்றும் வீட்டைச் சுத்தம் செய்வதற்குச் சராசரியாக 4-5 மணி நேரங்கள்



செலவிடுவேன். இரண்டு முறை குளிப்பது இரண்டு முறை பல் தேய்ப்பது ஆகியவற்றைப் பல வருடங்களாகச் செய்து கொண்டிருக்கிறேன். வாரத்திற்கு இரண்டு முறையாவது உப்பு வைத்து பல் தேய்த்துக் கொள்வேன். நான் மது அருந்துவதில்லை. அது அளவாக இருக்கும் பட்சத்தில் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிப்பதில்லை. புகைப்பிடிப்பதில்லை. எனக்கும் என் மகளுக்குமான தரமான நேரம் எனக்கு மிகவும் முக்கியம்.

ஏதாவது ஒரு படைப்பாற்றல் மிகுந்த செயலில் தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஈடுபடுவேன்.

6-7 மணி நேரம் உறக்கம். இவையெல்லாம் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்கு உதவுகிறதா என்று கேட்காதீர்கள். எனக்கு எல்லாமே ஒன்றோடொன்று தொடர்பு உடையவைதான். அவற்றை நான் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மிகத் துல்லியமாக உணர்கிறேன்.

17 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
JB
2025 ஆம் ஆண்டின் புதிய வரவு!
புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துக்குள் செய்து தரப்படும்
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்


KADHIR
Laila
Basmati Rice
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# ஒவ்வொரு வீடும் இருண்டிருக்கும் அவ்வீட்டின் தாய் விழிக்கும் வரை

**ஆஹா ! உயிரினும் இந்த பெண்மை இனிதடா !**



பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என வீட்டுக்குள் பெண்களைப் பூட்டி வைத்த காலத்திலேயே பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி கண்ட இலட்சியப் பெண் இவள்.

இனிமையும் மென்மையும் அன்பும் பொறுமையும் மட்டுமே பெண்களின் அணிகலன்கள் என்று இருந்த நிலையை மாற்றி இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம் என பெண்களுக்கு புது விதி சமைத்த பாரதி கண்ட இலட்சியப் பெண், நெஞ்சில் நீதியை ஆபரணமாக்கினாள். கரங்களில் புத்தகங்களைப் புனைந்தாள். வாக்கினில் வலிமை சேர்த்தாள். நிமிர்ந்த நன்னடையினில் அறமும், நேர் கொண்ட பார்வையில் திறமும் , துணிவெனும் துணியும் தரித்தாள்.

யார்க்கும் எளியனாய் யார்க்கும் வலியனாய் யார்க்கும் அன்பனாய் யார்க்கும் இனியனாய் வாழத் தெரிந்தவள் . சாஸ்திரங்களும் , நவீன விஞ்ஞானங்களும் கற்றுத் தெளிந்தவள் . பிற நாட்டு நூல்களை தமிழ் மொழியில் எழுத வல்லவள். வெளிநாட்டவரும் வணங்கும் வகையில் நம் கலாசாரங்களைப் பேணத் தெரிந்தவள். ஆம் ! பாரதி கண்ட இலட்சியப் பெண் இவள் .

சோர்விலாள். அச்சமிலாள். கேட்டிலும் துணிந்து நிற்பாள் . குன்றென நிமிர்ந்து நிற்பாள். சொல்வது தெளிந்து சொல்வாள் .மானம் காத்து நிற்பாள். பணத்தினைப் பெருக்கவும் தெரிந்திருப்பாள். தானத்திலும் சிறந்திருப்பாள். தனி ஒருவர்க்கு துயர் வரினும் ஜகத்தினை அழிக்கும் சினம் கொள்வாள். ரௌத்திரம் பழகியிருப்பாள். கருணை வடிவாகி நிற்பாள். கவியும் கலையும் மேவிட ஞானரதத்தினில் சென்றிட வல்லவள். செய்யும் தொழிலே தெய்வம் என எவ்வித வேலைகளையும் விரும்பியே பொறுப்பேற்பவள்.

ஆம் ! பாரதி கண்ட இலட்சியப் பெண் இவள்.

பெண் குழந்தையை செல்வக் களஞ்சியம் என்றும். தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம் ஓருருவாய் சமைந்த காதலியே யோகம் என்றும், மனைவியே சக்தி என்றும், போற்றித் தாய் என்றும் ஆண்கள் கொண்டாடும் வகையில் அறிவிலோங்கி வையம் தழைக்க வாழ்பவள்.

தனைத் தான் ஆளத் தெரிந்தவள்.



**கலாஶ்ரீ திவ்யா சுஜேன்**
(இலங்கை)

தன்னிகரில்லா வாழ்வினை தன் வசமாக்க வல்லவள். ஆணையிட்டால் அடிபணியாள் ஆனால் இப்பிரபஞ்சமே இவளுக்கு சேவகம் செய்யும். ஆம்! பாரதி கண்ட இலட்சியப் பெண் இவள்.

மெய் யுருவாகி பெண்ணுருபோந்து நிற்பது தாய் சிவசக்தி என்று அறியும் ஆற்றல் நமக்கு இருந்தால், அவள் கையினை கண்ணில் ஒற்றி களித்து நின்றாடுங்கள், போற்றி போற்றி வாழி பல்லாண்டு என்று பாடிடுங்கள். ஆம் ! பாரதி கண்ட இலட்சியப் பெண் இவள்.இவள் எம்மை பெற்ற தாயாகவும் இருக்கலாம்.

அன்றாடம் உழன்று மடியும் சுமை வரினும் , அன்புடையோர் சுகத்தினில் இன்பம் கண்டு மீண்டும் உயிர்க்கும் தாய்மையின் தவத்தினால் இயங்குகிறது இப்புவி. ஒவ்வொரு வீடும் இருண்டிருக்கும் அவ்வீட்டின் தாய் விழிக்கும் வரை (கலீல் கிப்ரான்). வாழ்வின் வெளிச்சம் பெண். ஆதாலால் தான் பாரதி புதுமை பெண் ஒளி வாழி பல்லாண்டு என்று வாழ்த்துகிறார்.

ஆதலினால் பெண்மையைப் போற்றுவோம். அவர்கள் தன்மையைப் பேணுவோம். கண்முன் ஓர் பெண்வரின் கடவுள் என்று எண்ணுவோம். பெண்ணை பெண்ணாக வாழ விடுவோம். வந்த வாழ்வின் பயன் கிட்டும். இவ்வையம் சிறக்கும்.



வசந்த கணங்கள் மலரும். அன்பும் ஆனந்தமும் அமைதியும் எங்கணும் நிலவும். நம் உயிர் நிறையும்.

2025 சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி வெற்றிமணி ஊடாக கௌரவம் பெற்ற அனைத்து பெண் ஆளுமைகளையும் பாரதி கண்ட இலட்சிய பெண்களாகவே தரிசித்து வாழ்த்திப் பணிகிறேன்.

## யேர்மனிய தேசிய பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றிகரமாக விளையாடிய சகோதரிகள்!






கடந்த மாதம் வார இறுதியில் குற்றர்ஸ்லோ நகரில் இடம்பெற்ற முழு யேர்மனிக்குமான தேசிய தரநிலைக்கான Badminton சுற்றுப்போட்டியில் இளையோர்கள் வரிசையில் TV Aldingen சார்பில் மிகவும் மூர்க்கமான போட்டியாளர்களுடன் கடுமையான போட்டியில் சளைக்காமல் ஈடுபட்டு U11 வயதுப்பிரிவில் சகோதரிகள் மகிழியும் U13 வயதுப்பிரிவில் தமிழியும் முறையே 2ஆவது மற்றும் 3ஆவது இடத்தைத் தமதாக்கிக்கொண்டார்கள்.

தனிச்சுற்றிலே களமிறங்கிய மகிழி மார்க்கண்டு கடுமையான இரண்டு போட்டியாளர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தபோதிலும் திறமையாக விளையாடி 2ஆவது இடத்தைத் தனதாக்கியிருந்தார்.

மகிழியின் சகோதரி தமிழி மார்க்கண்டு தனக்குரிய U13 இல் தனி-இரட்டை-கலப்பு என மூன்று ஒழுங்குகளிலும் சளைக்காமல் தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார். கடுமையான பிரயத்தனத்துடன் விளையாடி 3ஆவது இடத்தை வெற்றிகொண்டார்.

யேர்மனின் தேசிய மட்டத்திலான போட்டிகளில் தங்களின் திறமைகளை மூலாதாரமாகக்கொண்டு முன்னணிகளில் தங்களால் விளையாட முடியும் என்பதை இவ்விரு சகோதரிகளும் அற்புதமாக வெளிப்படுத்தியிருந்தனர்.


AJ
ENTERTAINMENT
ARUN JESUTHASAN
OLYYN THANASINGH
PRESENTS
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
SANTHOSH
NARAYANAN
LIVE IN GERMANY
07.06.2025
GET YOUR TICKETS NOW
ticketmaster®



நவீனன்
(அவுஸ்திரேலியா)

# ரணிலின் சுயரூபத்தை வெளிக்காட்டிய அல்ஜசீரா

## போர்க்குற்ற விசாரணை மறுதலிப்பா? ஒப்புதலா?

(நுணலும் தன் வாயால் கெடும் எனும் பழமொழிக்கு ஒப்பாக, ரணிலும் தன் வாயால் பல விடயங்களை ஒப்புக் கொண்டு விட்டார். அல்லது ஒப்பாரி வைத்து விட்டார் என்றும் கருதலாம். எப்படித் தான் தன் சிங்கள இனத்தை போர்க்குற்றத்தில் இருந்து காப்பாற்ற அவர் முயற்சித்து இருந்தாலும், அவரின் நேர்காணல் சிங்கள தேசத்தின் உண்மை முகத்தை உலகிற்கு தோலுரித்துக் காட்டி விட்டது என்பதை மறுக்க முடியாது) சிங்களவர்களால் அதிபுத்திசாலியாகக் கருதப்படும் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அல் ஜசீராவில் தொலைக்காட்சியின் ஹெட் டு ஹெட் (Head To Head) நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் மெஹ்தி ஹசனுக்கு வழங்கிய நேர்காணலில், ஈழத் தமிழர்களின் மீதான இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை இராணுவம் தடுத்து நிறுத்தியதை தன் வாயேலேயே ஒப்புக் கொண்டுள்ளார்.

நுணலும் தன் வாயால் கெடும் எனும் பழமொழிக்கு ஒப்பாக, ரணிலும் தன் வாயால் பல விடயங்களை ஒப்புக் கொண்டு விட்டார். அல்லது ஒப்பாரி வைத்து விட்டார் என்றும் கருதலாம். எப்படித்தான் தன் சிங்கள இனத்தை போர்க்குற்றத்தில் இருந்து காப்பாற்ற அவர் முயற்சித்து இருந்தாலும், அவரின் நேர்காணல் சிங்கள தேசத்தின் உண்மை முகத்தை உலகிற்கு தோலுரித்துக் காட்டி விட்டது என்பதை மறுக்க முடியாது.

### போரில் உதவியை தடுத்த இராணுவம்:



ரணில் விக்கிரமசிங்க தன்னை அமைதியின் அரசியல்வாதி, ஜனநாயகம் மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தும் தலைவர் என்று பல சுயமுத்திரைகளை குத்துக் கொள்பவர். அத்துடன் இலங்கை ஒரு வன்முறையற்ற நாடு என்றும், முன்னேற்றம் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை கவனமாக தான் வடிவமைத்துள்ளார் என்றும் அவர் உலகிற்கு கூறி வருபவர். இருப்பினும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, அவரது வார்த்தைகள் யதார்த்தத்தின் கொடூரமான கேலிக்கூத்தாகும். இறுதிப் போரில் மட்டும் 165,000க்கும் மேற்பட்டோர் ஒரு பாரிய இனப்படுகொலையில் கொல்லப்பட்டனர். அதை ரணில் வெறும் சம்பவமாக குறை மதிப்பிட்டே கூறி வருகிறார். உண்மையிலே ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு இதுதான், போர்க்குற்றங்களை வெள்ளையடித்தல், இனப்படுகொலை எனும் சொற்பதத்தையே அகராதியில் இருந்து நீக்குதல், மற்றும் இன அழிப்பு செய்த அரசைப் பாதுகாத்தல். ஆனால் அவரது தலைமை தாங்கிய சிங்கள அரசோ 77 ஆண்டுகளாக தமிழர்களை ஒடுக்கிய பௌத்த இனவாத வன்முறையின் கட்டமைப்புகளால் உருவமைக்கப்பட்டுள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஈழத்தில் இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை இலங்கை அரச படைகள் தடுத்தன என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மேலும் மெஹ்தி ஹசனுக்கு வழங்கிய நேர்காணலில், பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வழக்குத் தொடுப்பிலிருந்து பாதுகாக்கவில்லை என்றும் மறுத்துள்ளார்.

### போர்க் குற்ற விசாரணை மறுதலிப்பு:

இந் நேர்காணலில் கூறியது போல இலங்கை வன்முறையற்ற நாடு என்ற விக்கிரமசிங்கவின் கூற்று அப்பட்டமான அவமானமாகும். இலங்கை அரசு ஒருபோதும் வன்முறையற்றதாக இருந்ததில்லை என்பது வரலாற்றில் தெளிவாகிறது.

1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் அரசால் நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் முதல் 2009 இல் முள்ளிவாய்க்கால் படுகொலையில் உச்சக்கட்டத்தை அடைந்த இனப்படுகொலைப் போர் வரை தமிழ் மக்களை திட்டமிட்டு அழிப்பதன் அடிப்படையில் சிங்கள அரசும், அதன் இராணுவமும் கட்டமைக்கப்பட்டது. இன்றும் கூட, தமிழ் நிலம் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. தமிழ் பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு தொடர்ந்தும் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள் மௌனமாக்கப்படுகிறார்கள். அத்துடன் போரில் காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் தமிழ் குடும்பங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

2019 ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய கொடிய ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்களுடன் அரசாங்க தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவதை நம்பகத் தன்மையுடன் விசாரிக்க தனது சொந்த நிர்வாகம் தவறிவிட்டது என்ற புதுப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் மறுத்தார்.




2009 ஜனவரி - மேக்கு இடையில், 165,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர். பொதுமக்கள் "போர் இல்லாத பிரதேசம்" (No Fire Zone) என்று அழைக்கப்படுவதற்குள் கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர்.

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்






சேவியர்
(தமிழ்நாடு)

# AI எழுதும் கட்டுரைகள்

**ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளியைப் போல எழுதி சாதிப்பதில்லை. ஆனால், அதை ஏ.ஐ சாத்தியமாக்கித் தரும்**

**எந்த ஒரு படைப்பை எழுதினாலும் தொழில்நுட்பம் படைப்பாளிக்கு பேனாவாக இருக்கலாமே தவிர மூளையாக இருக்கக் கூடாது**

ஏ.ஐ எழுதும் கட்டுரைகள் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுத ஆரம்பித்த போது அதை சாட் ஜிபிடியிடமே கேட்டால் எப்படி இருக்கும் என யோசித்துப் பார்த்தேன் ! கேட்டால் நான்கு பக்கத்துக்கு நீட்டி முழக்கி ஒரு கட்டுரை தரும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. அது சுவாரஸ்யமாய் இருக்கலாம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், இவற்றில் என்ன ஜீவன் இருக்கிறது ? இவற்றில் என்ன ஆத்மார்த்தம் இருக்கிறது என்று யோசித்தால் கவலையாக இருக்கிறது.

கட்டுரை என்பது வெறும் தகவல்களின் திரட்டல்ல, அவை பூக்களைக் கோத்து மாலையாய் எழுதும் கலை. எழுதும் போதே எழுத்தாளர் ஒவ்வொரு மலராய் எடுக்கிறார், ரசிக்கிறார், அதன் வாசனையை நுகர்கிறார், அதை மாலையாய்க் கட்டும் போது வாசகன் என்ன மாதிரியான உணர்வை அடைவான் என்பதை யோசிக்கிறான். அந்த மாலை வாசகனைக் கவருமா, வாசகனின் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாய் இருக்குமா என யோசிக்கிறான். எந்த வகையிலும் எதிர் மறை சிந்தனைகளைப் பகிரக் கூடாதென கவனமாய் இருக்கிறான். ஆனால், ஏ.ஐ அப்படியெல்லாம் யோசிப்பதில்லை. தனது அல்காரிதம் எதை அள்ளிக் கொண்டு வருகிறதோ அதைத் தோரணம் கட்டித் தோளில் தருகிறது. அந்த மாலை, திருமண வீட்டுக்கானதா ? அல்லது கல்லறைத் தோட்டத்துக்கானதா எனும் கவலையே அதற்கு இல்லை. அந்த மாலையில் வாழ்த்துகள் விழுமா, கண்ணீர் விழுமா என அது சிந்திப்பதில்லை.

மகாத்மாவைப் பற்றி எதுவும் அறியாமலேயே, மகாத்மா காந்தியின் வாழ்க்கையை எழுதி முடிக்கும். காந்தீய சிந்தனைகளையெல்லாம் அது அசைபோடுவதில்லை. அப்படியே கையை உதறிவிட்டு, கோட்சேயின் வாழ்க்கை வரலாறை எழுதப் போய் விடும். அது தான் ஏ.ஐ செய்யும் வேலை.

கற்பனையாய் ஒரு தேசத்தை உருவாக்கும். நமது கற்பனைகளை அதன் காதில் கொட்டினால், அது அதன் கற்பனையையும் சேர்த்து ஒரு புதிய உலகைப் படைக்கும். ஆனால் அதில் ஒரு சிற்பியின் கவனமோ, அல்லது தனது உயிரை ஊற்றும் ஒரு கலைஞனின் ஜீவனோ இருக்காது. வேண்டாம் என்றால் அடுத்த கணமே கலைத்துப் போட்டு விட்டுக் கடந்து போய் விடும்.

ஒரு காலத்தில் எல்லாவற்றையும் படைப்பாளியே கற்பனையில் உருவாக்க வேண்டும். ஆதி முதல் அந்தம் வரை அது அவனுடைய உயிர் மூச்சாய் இருந்தது. அதன் பின் கூகிள் வந்து வேலையை சுலபமாக்கியது. அது தகவல்களைத் தந்து உதவியது. ஒரு கொத்தனாருக்குக் கையாள் இருப்பதைப் போல அது இருந்தது. ஆனால் இப்போது சேட் ஜிபிடிகளின் காலம். இங்கே கொத்தனாரே வெளியேற்றப்பட்டு விட்டார். படைப்புகளுக்கான மரியாதை வலுவிழந்து வருகிறது. ஒருவர் நூற்றுக்கணக்கான நாவல்களை சேட்.ஜிபிடி வைத்தே எழுதி பணக்காரர் ஆகிவிட்டார் என ஒரு கட்டுரையை சமீபத்தில் படித்தேன்! வியப்பாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது.



கவிதை எவ்வளவு புனிதமாய் இருந்தது! இன்று, நாம் கேட்பதைக், கேட்கின்ற மொழியில் கவிதைகளாய் எழுதித் தருகிறது தொழில்நுட்பம். ஆனால் அதில் நாம் உணர்கின்ற கவித்துவ சிலிர்ப்பு மட்டும் வருவதே இல்லை. காதல் கவிதைகளை எழுதும் ஏஜக்களுக்கு ஒரு காதலியின் வருடல் தெரியுமா ? அல்லது காத்திருந்தலின் அவஸ்தை தெரியுமா? அல்லது ஒரு நிராகரிப்பின் வலி புரியுமா ? இவை எதுவும் இல்லாத கவிதைகள், கவிதைகளா என்ன ?

ஒரு காலத்தில் நமது அப்பாக்கள் காலத்தில் நூறு பேரோட லேண்ட் லைன் நம்பரையும், விலாசத்தையும் நினைவில் வைத்திருப்பார்கள். அவர்கள் பாக்கெட்டில் ஒரு சின்ன நோட் புக் இருக்கும். செல்போன் ஆதிக்கம் செலுத்திய பின் இன்றைக்கு நமக்கு அதிக பட்சமாக மூன்றோ, நான்கோ எண்கள் தான் நினைவில் இருக்கும். மற்றதெல்லாம் போனை நோண்டினால் தான் கிடைக்கும்! அது தானே நிலமை!

முன்பெல்லாம் அண்ணாச்சி கடைகளில் நூறு பொருட்கள் வாங்கினால் கூட ரெண்டே நிமிடத்தில் மனக்கணக்காகவே எவ்வளவு ஆச்சு என்பதைச் சொல்வார். ஆனால் இன்றைக்கு ? கேல்குலேட்டர் இல்லாவிடில் ஒன்றும் நடக்காது என்பது தானே நிலை ? அதே நிலை தான் கிரியேட்டிவிட்டி எனப்படும் படைப்பாற்றலுக்கும்

17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# AI எழுதும் கட்டுரைகள்



நிகழும். எந்த அளவுக்கு ஏ.ஐ ஐச் சார்ந்திருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களுடைய கற்பனைத் திறன் வற்றிப் போய் விடும்.

ஆனாலும் ஒட்டு மொத்தமாக தொழில்நுட்ப வளர்ச்சியை உதறித் தள்ளவும் முடியாது. ஒரு காலத்தில் நூலகம் நூலகமாக ஏறி இறங்கி மாதக் கணக்காகத் திரட்டிய தகவல்களை விட நூறு மடங்கு அதிக தகவல்களை இவை வினாடிகளில் தந்து விடுகின்றன. அதுவும் துல்லியமான தகவல்களைத் தேடி எடுத்துத் தருகிறது. கடினமான தலைப்புகளைக் கூட எளிமையாய் எழுதித் தரவும் செய்கிறது.

இதற்கு எந்த விதமான உணர்ச்சிகளும் இல்லை. எனவே ஒருவரைப் பற்றியோ, ஒரு விஷயத்தைப் பற்றியோ எழுதும் போது கொஞ்சமும் சார்பு நிலையற்ற வகையில் இவை எழுத முடியும். அவனைப் பிடிக்கும், இவரைப் பிடிக்கும், அந்த கொள்கையைப் பிடிக்கும் என்றெல்லாம் ஏ.ஐ. பேசாது. அது உள்ளதை உள்ளபடி சொல்லும். ஒரு வகையில் நடுநிலையான ஒரு பார்வைக்கு ஏ.ஐ தரும் கட்டுரைகள் பயனளிக்கும்.

ஒவ்வொரு படைப்பாளிக்கும் ஒவ்வொரு ஸ்டைல். ஜெயகாந்தனின் எழுத்து நடை இது, கல்யாண்ஜியின் எழுத்து நடை இது, வைரமுத்துவின் நடை இது, கலீல் ஜிப்ரானின் கவி நடை இது என வாசிக்கும் போதே ரசிகன் கண்டுணரலாம். ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளியைப் போல எழுதி சாதிப்பதில்லை. ஆனால், அதை ஏ.ஐ சாத்தியமாக்கித் தரும். பலருடைய ஸ்டைலில் அது எழுதும். பெரியவர்களுக்கு, இளையர்களுக்கு, சிறுவர்களுக்கு என ஆளுக்குத் தக்கபடி தனது எழுத்தை



மாற்றவும் செய்யும். இவையெல்லாம் நேரத்தை சேமிக்கவும், ஒரு செய்தியை அழகாய் பல தரப்பு மக்களுக்குக் கொண்டு சேர்க்கவும் பயன்படும்.

ஆளை விடுப்பா, டயர்டா இருக்கு நாளை எழுதி தரேன் என ஏ.ஐ சொல்லாது. இதென்ன புதுசா கற்பனை பண்ண வேண்டியிருக்கு என சொல்லாது. இந்தக் கட்டுரையை எழுத நிறைய வாசிக்கணும், நிறைய டிராவல் பண்ணணும், நிறைய பேர் கூட பேசணும்.. நிறைய டைம் ஆகும், நிறைய செலவும் ஆகும் என சொல்லாது !

இப்படி தொழில்நுட்பத்தால் வருகின்ற பயன்களும் ஒரு புறம் இல்லாமல் இல்லை. எனவே, எந்த ஒரு படைப்பை எழுதினாலும் தொழில்நுட்பம் படைப்பாளிக்கு பேனாவாக இருக்கலாமே தவிர மூளையாக இருக்கக் கூடாது! படைப்பாளிக்கு தொழில்நுட்பம் உபயமாக இருக்கலாமே, இதயமாக இருக்கக் கூடாது. இந்த சிந்தனையை மனதில் வைப்போம். படைப்பை வனைவோம், தொழில்நுட்பத்தின் பாக்கெட்டிலிருந்து உருவி எடுக்காதிருப்போம் ■

---

II ஆம் பக்கத் தொடர்ச்சி...





## இன்றைய சூழலில் பலரும் உடல் எடையைக் குறைப்பது பற்றி மட்டுமே பேசிக் கோண்டிருக்கிறார்கள்

இன்றைய சூழலில் பலரும் உடல் எடையைக் குறைப்பது பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான உடற்பயிற்சி எந்தெந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறார்கள். அதைக் கடைப்பிடிக்க முடியாமல் போகும் நேரத்தில் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். அதுமட்டுமல்லாமல் உணவை உண்ணும் போது அதை ரசித்து உண்பதை விட அதிகக் குற்ற உணர்வுக்கே தங்களை உட்படுத்திக் கொள்கிறார்கள். சில பிடித்த உணவு வகைகளைக் கான்ஷியஸாகத் தவிர்க்கும் போது அதன் மீது அதிக நாட்டமும் அதை உட்கொள்ள முடியாமல் தவிக்கும் மனநிலைக்கும் தேவையில்லாமல் தங்களைத் தள்ளிக் கொள்கிறார்கள். இது காலப்போக்கில் ஆரோக்கியமற்ற மனநிலையையும், உடல் உபாதைகளையும் ஏற்படுத்தும். என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு தவறான அணுகுமுறை. உடல் எடை குறைப்பு என்பது ஆரோக்கியத்தின் ஒரு சிறிய அம்சம், அதுவே மொத்த உடல் ஆரோக்கியம் ஆகிவிடாது. எனவே உங்கள் குறிக்கோளை எடைக் குறைப்பு என்று வைத்துக் கொள்ளாமல் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியம் என்று வைத்துக் கொண்டு வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.

எடை குறைப்பு என்பதை மட்டுமே அளவு கோலாகக் கொள்ளாமல், உங்கள் சிறுநீர், நீங்கள் கழிக்கும் மலத்தின் தன்மை அவற்றின் frequency, உங்கள் நாக்கில் படியும் வெள்ளைப் படலத்தின் தன்மை, உங்கள் மூச்சுக் காற்றின் வாசனை, உங்கள் தூக்கத்தின் நேர அளவு, உங்கள் உடலின் பேலன்ஸ், ஆற்றல் அளவு, ஆகியவற்றைக் கவனியுங்கள். நீங்கள் எதை உண்ண வேண்டும் உங்களுக்கு எந்த விதமான பயிற்சி வேண்டும் என்பதை உங்கள் உடல் தெள்ளத் தெளிவாகக் காண்பித்துக் கொடுக்கும். அதை உற்று நோக்கும் நுண்ணறிவை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நான் மேலே குறிப்பிட்ட வாழ்க்கை முறையைச் சுமார் பத்து வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதனால் என் உடல் எனக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறது என்றே நான் நினைக்கிறேன். இவை எல்லாவற்றையும் செய்வதால் எனக்கு எந்த நோயும் வரவே வராது என்று என்னால் உறுதி அளிக்க முடியாது. ஆனால் எனக்குக் காய்ச்சல் சளி, அஜீரணப் பிரச்சனைகள், (97%) மலச்சிக்கல் (100%) போன்றவை பெரும்பாலும் வருவதில்லை. இதுவரை பெரும்பாலான ஆண்டுகளில் மருத்துவமனைக்கான என்னுடைய செலவு 0. Congenital problemMf இருதயம் மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறேன். சில மரபணு சார்ந்த வியாதிகளை நம்மால் தவிர்க்க முடியாது. அதற்கான தனிக் கவனம் செலுத்த வேண்டும். எனவே இதுதான் சிறந்த முறை என்று என்னால் எதையும் உறுதியாக இங்கே சொல்ல முடியாது. முடிந்த வரையில் நம் உடலைப் பற்றிய இயக்கங்களை அறிந்து கொண்டு, அதற்குத்தக்க வாழ்க்கையை வாழ்ந்து உடலை ஆரோக்கியமான முறையில் பேணிக்கொள்வது மிகவும் முக்கியம்.



### நல்ல ஆரோக்கியமான உடல் கலவி

24 மணி நேரத்தில் சுமார் 20 மணி நேரத்தை நான் கான்ஷியஸாகவே என் உடல் ஆரோக்கியத்திற்காகச் செலவிட்டுக் கொள்கிறேன் என்று சொல்லலாம். மேலே குறிப்பிட்டவற்றில் நான் தவறவிட்டது, நல்ல ஆரோக்கியமான உடல் கலவியைப் பற்றி (sex). அதுவும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது. அதற்கு வாய்ப்பு கிடைக்காதவர்கள் தங்கள் உடலில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஆற்றலைச் செலவிடுவதற்கு இன்னும் அதிக நேரம் உழைப்பு அல்லது உடற்பயிற்சியோ செய்து கொள்வது அவசியம். நம் உடலில் அதிக அளவு ஆற்றல் தேங்கிக் கிடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் என்னைப் பொறுத்தவரையில் மன அழுத்தத்திற்கும், பல விதமான உள நோய்களுக்கும் முக்கியமான காரணம். ஆரோக்கியமான உணவின் மூலம் ஆற்றலை நம் உடலுக்குச் செலுத்திக் கொள்வதும், அதை வெளியேற்றிக்கொள்வதிலும் ஒரு பேலன்ஸ் இருக்க வேண்டும். அது இருந்தாலே ஆரோக்கியமான வாழ்வை நம்மால் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

“நெறிமுறை படுத்தப்பட்ட ஒரு வாழ்க்கைக்குள் நாம் நகர்ந்தவுடன் கட்டற்ற சுதந்திரம் என்பது அர்த்தமற்றுப் போய்விடுகிறது. ஆனால் அந்த கட்டற்ற சுதந்திரத்தை உணர, முதலில் நம் வாழ்க்கையை நெறிமுறை படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. இங்கே, எந்த ஒரு நிகழ்வையும், செயலையும் தனித்தனியே அர்த்தம்கொள்ள முடிவதேயில்லை“ ■







# நெதர்லாந்தில் மகளிர் தின விழா

## 08.03 2025



யாவரும் கேளிர் யாவையும் வெல்லும் முகமாய் அனைத்துலக மகளிர் நாளை, முதல் முறையாக நெதர்லாந்தின் Joure நகரில் ஆரம்பிக்கப்பட்டு, அறிவாலயம் தமிழ் பாடசாலை சிற்றார்ட், ணநளைவ நகரிலும் கொண்டாடப்பட்டது.

இம்முறை 2025 ம் ஆண்டை வரவேற்கும் முகமாக நெதர்லாந்தின் Reeuwijk நகரில் மிகவும் கோலாகலமாக எம் பாரம்பரிய நிகழ்வுகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதிலும் இம்முறை 108 குடபவனியோடு,சிகப்புநிற சேலையுடன் பெண்கள் பவனி வந்தமை கண்கொள்ளாக்காட்சியாக காணப்பட்டதுடன், நாதஸ்வர ஓசை, மேளதாள பவனியோடு அரங்கத்தை அதிர வைத்து மேலும் கோலாட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம்,பரதம் என பல்வேறு நிகழ்வுகள் கண்ணுக்கு விருந்தாய் அமைந்திருந்தது.

இவ் விழாவின் முக்கிய பொறுப்பிலிருக்கும் யாவரும் குழுவைச்சேர்ந்த திருமதிகளான ராதிகா ஈஸ்வரசோதி, சுஜிரமேஷ், பவானி தில்லைநாயகம், சாந்தாபாலகிருஸ்ணன் போன்றோர்கள் முன்னின்று நிகழ்ச்சிகளை கொண்டு செல்வதற்கு முன்னோடியாக திகழ்ந்தார்கள். அத்தோடு இவ் நிகழ்வுக்கு பிரதான அனுசரணையாளர்களாக KUGAN BAU, SLA CATERING போன்ற நிறுவனங்களின் பேருதவியோடும். இன்னும் நல் உள்ளங்களின் உதவிகளும் ஒருங்கே அமையைப்பெற்ற ”மகளிர் விழா” சிறப்பாக அமைந்தது.

மண்டபம் நிறைந்த மக்களுமாய், நெதர்லாந்தின் பல்வேறு நகரங்களிலிருந்தும், பல்வேறு நாடுகளிலிருந்தும்.வருகை தந்திருந்தனர். ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் இருப்பதைப்போன்று இவர்களின் வெற்றிகளுக்குப்பின் ஆண்களும் துணை நின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல்: க.சிறிதாஸ்**
**(நெதர்லாந்து.)**

# உயிர்ப்பு ஞாயிறு (Easter)

**நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்கு பிழைத்திருக்கும்படி, அவர்தாமே நமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1பேதுரு 3:24 )**



பாவம் என்பது இருள். ஒரு மனிதனுக்குள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பிரிவுண்டு. இந்த ஆத்துமா இருளில் இருந்தால், எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லை. ஓர் நடைபிணம். ‘ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு என்ன லாபம்’ என்று வேதம் எம்மை கேள்வி கேட்கிறது. ஆத்துமா பாவத்திலிருந்தால் அவன் வாழ்கையில் நிம்மதியிலை. இந்த பாவத்திலிருந்து விடுதலை தரத்தான் இயேசுகிறிஸ்த்து இந்த பூமிக்கு வந்தார். அவர் சொன்னார் ‘வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்’ என்று அவர் சொன்னார் அதை செய்தார், செய்துகொண்டிருக்கிறார்.

நமக்குள் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். நமக்குள் சத்தியம் இருக்காது. பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி பரம்பரை பாவ, சாபத்திலிருந்து கழுவி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

உலகத்தையும், அதில் உள்ள யாவற்றையும் படைத்தவர். ஜனங்கள் மகிழ்ந்திருக்கும்படி யாவையும் செய்து முடித்தார். ஜனங்களின் ஆறறிவற்ற அன்பில்லாததினால், உலகில் பாவம் சாபம் பெருகிட, ஜனங்களின் கூக்குரல் பரலோகம் சென்றிட இயேசு கிறிஸ்து பூமிக்கு இறங்கி வந்தார். அவர் சத்தியவான், பரிசுத்தவான், நீதிமான், அன்பிற்கு முடிவில்லாதவர். எங்களுடைய பாவ, சாப, அக்கிரமங்களுக்காக அவர் மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு,அவமானப்பட்டு, காயப்பட்டு, நொறுக்கப்பட்டு, வலி, வேதனையை எங்களுக்காக சரீரத்தில் சுமந்து, எங்கள் மீறுதலினிமித்தம் வாதிக்கப்பட்டர்.


எங்களுக்கு சமாதானம் உண்டுபண்ணும் தண்டனையும் அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகின்றோம்.

மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று மரித்த மூன்றாம் நாள் எழுந்து, ‘சமாதானம் உண்டாவதாக’ என்று சொன்னவர். சத்தியத்தின்படி நடக்கும் பரிசுத்தவான்களை அழைத்து செல்ல வருவார்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (1 யோவான் 2:2)

**வாமினி**
**(Gevelsberg Germany)**






வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில்
Wirtschaftsingenieurin
ஆக படிப்பை நிறைவு செய்த
36 வயது நற்குணமுள்ள சைவ
வேளாள பெண்ணிற்கு பொருத்தமான
பட்டதாரி மணமகனை யேர்மனியில்
எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in



# பூமி திடீரென 2 மடங்கு வேகமாக சுழலத் தொடங்கினால் என்ன நடக்கும்!



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

நீங்கள் ஒரு காலையில் எழுந்து, பூமி திடீரென இரண்டு மடங்கு வேகமாக சுழலத் தொடங்கியது என்று கற்பனை செய்து பாருங்கள். அட இது என்னடா ஆரம்பமே விபரீதமாக இருக்குதே என்று நினைக்கின்றீர்களா? இது அறிவியல் புனைகதை போல் தோன்றலாம், ஆனால் நம் கிரகம் ஒரு சுழற்சிக்கு 24 மணிநேரத்திற்குப் பதிலாக 12 மணிநேரம் மட்டுமே எடுத்துக் கொண்டால் என்ன நடக்கும்? இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று பார்ப்போமா?

பூமி இரண்டு மடங்கு வேகமாக சுழன்றால், ஒரு நாள் 12 மணிநேரமாக மாறும். இதன் பொருள், வேலை, தூக்கம், உணவு, பொழுதுபோக்கு போன்ற அனைத்திற்கும் உங்களுக்கு பாதி நேரம் மட்டுமே கிடைக்கும். நாள் மற்றும் இரவு சுழற்சி மிகவும் குறுகியதாக இருக்கும். ஆனால் எச்சரிக்கை: உங்கள் உடலின் உள்ளார்ந்த ரிதம் முற்றிலும் குழப்பமடையும். விஞ்ஞானிகள் நம்புவது என்னவென்றால், நம் உடல்கள் இவ்வளவு குறுகிய நாட்களுக்கு ஏற்ப மாறுவது கடினம். தூக்கக் கோளாறுகள் மற்றும் நிரந்தர சோர்வு ஆகியவை இதன் விளைவுகளாக இருக்கும்.

பூமி வேகமாக சுழல்வதால், மையவிலக்கு விசை அதிகரிக்கும், இது நம்மை பூமியின் மேற்பரப்பில் இருந்து விலக்கும். இதன் விளைவாக, நீங்கள் பூமியின் சில இடங்களில் திடீரென இலகுவாக இருப்பீர்கள்! பூமியின் மையவிலக்கு விசை பூமத்திய ரேகையில் மிகவும் வலுவாக இருக்கும். இது எடை குறைக்க விரும்பும் அனைவருக்கும் ஒரு கனவு போல் தோன்றலாம், ஆனால் கவலைப்பட வேண்டாம் – பூமியின் ஈர்ப்பு விசை இன்னும் நம்மை தரையில் வைத்திருக்க போதுமானதாகத் தான் இருக்கும்.

பூமியின் வேகமான சுழற்சி வளிமண்டலத்தையும் பாதிக்கும். காற்றுகள் வலுவாக மாறும், மேலும் சூறாவளிகள் மற்றும் டொர்னாடோக்கள் இன்னும் தீவிரமாகவும் அடிக்கடி நிகழும். இதற்குக் காரணம் பூமியின் சுழற்சியால் உருவாகும் கோரியோலிஸ் விசை. இது இரட்டை வேகத்தில் வலுப்படுத்தப்பட்டு வானிலையை குழப்பமாக மாற்றும். 300 km/h மேல் காற்று வேகம் கொண்ட புயல்கள் இனி அரிதானது அல்ல!



அதிகரித்த மையவிலக்கு விசையால், பூமி துருவங்களில் தட்டையாகவும் பூமத்திய ரேகையில் வீங்கியும் இருக்கும். இதன் பொருள், பூமத்திய ரேகையில் பூமியின் விட்டம் இன்றையதை விட பெரியதாக இருக்கும். விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர், பூமத்திய ரேகை மற்றும் துருவங்களுக்கு இடையிலான வேறுபாடு பல கிலோமீட்டர்கள் வரை அதிகரிக்கக்கூடும். இது புவியியலையும் பாதிக்கும்: பூமத்திய ரேகையில் உள்ள தீவுகள் மற்றும் கடற்கரை பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கக்கூடும், அதே நேரத்தில் துருவங்கள் இன்னும் வறண்டு போகும்.

நமது முழு நேர அளவீடும் பூமியின் 24 மணி சுழற்சியை அடிப்படையாகக் கொண்டது. பூமி இரண்டு மடங்கு வேகமாக சுழன்றால், நமக்கு 12 மணி நாட்கள் மட்டுமே இருக்கும். இது நமது காலண்டர்கள், கடிகாரங்கள் மற்றும் நமது தொழில்நுட்பத்தில் கூட பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். துல்லியமான நேர அளவீடுகளை அடிப்படையாகக் கொண்ட ஜிபிஎஸ் அமைப்புகள் முற்றிலும் பயனற்றதாக மாறும். நாம் நமது கடிகாரங்களை மட்டுமல்ல, நேரத்தை அளவிடும் நமது முழு முறையையும் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

இரட்டை வேக பூமியின் சுழற்சி நம் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றும், நமது தூக்க ரிதம் முதல் வானிலை மற்றும் புவியியல் வரை. ஆனால் இந்த கற்பனை எவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தாலும், நம் கிரகம் நமது தேவைகளுக்கு எவ்வளவு சரியாக பொருந்துகிறது என்பதை இது நமக்குக் காட்டுகிறது.

எனவே, அடுத்த முறை நீங்கள் ஒரு நீண்ட நாளைப் பற்றி புகார் செய்யும் போது, இதையெல்லாம் நினைவில் கூறி மகிழ்ச்சியடையுங்கள்!







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# உயிர்ப்பு விடியலில் திறப்பு



கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை இறைமகன் இயேசுவின் மரணமும், உயிர்ப்புமே. ஒரு தொழுவத்தில் ஏழையாய்ப் பிறந்து, ஒரு மலையுச்சியில் நிராயுதபாணியாய் படுகொலை செய்யப்பட்டார் இயேசு. மதவாதிகளும், எதிரிகளும் வெற்றி என கொக்கரித்தனர். இயேசுவோ மூன்றாம் நாள் சாவை வென்று உயிர்த்தெழுந்தார். மனுக்குலத்தின் பாவங்களுக்காக

**சேவியர்** (தமிழ்நாடு)

தானே பலியானார். அவரை நம்பி,அவரது போதனைகளின் படி வாழ்வோர் நிலை வாழ்வைப் பெறுவார்கள் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை !

இயேசுவின் உயிர்ப்பு நமக்கு மேலும் பல சிந்தனைகளைத் தருகிறது. நமது வாழ்வுக்கான பல பாடங்களை இயேசுவின் உயிர்ப்பு நிகழ்விலிருந்து கற்றுக் கொள்ளலாம். இது ஒரு நம்பிக்கையின் நிகழ்வு ! இருளோ, தோல்வியோ, துயரமோ நிரந்தரமானதல்ல. இருளின் குகையிலிருந்தும், விடியலின் ஒளி பிறக்கும். மரணத்தின் துருக்களிலிருந்து கூட, வாழ்வின் தெருக்கள் தோன்றும் எனும் நம்பிக்கையின் அறைகூவலாய் உயிர்ப்பு நாள் இருக்கிறது. நம்மை எதிர்கொள்ளும் இருள் எத்தனை அடர்த்தியாய் இருந்தாலும், வெளிச்சம் ஒன்று நமக்காய் வெளிப்படும். எனவே இருளைக் கண்டவுடன் முடங்கிவிடாமல் முன்னேற வேண்டும். நம்பிக்கையிழந்த மக்களுக்கான நம்பிக்கையாய் நாம் உருமாற வேண்டும். எந்த ஒரு துயரமும் தற்காலிகமானதே ! புதைக்கப்பட்ட சூழலில் விதைகள் சமாதியாவதில்லை, விடியல் பச்சையுடன் விழித்தெழுகிறது. இந்த சிந்தனைகளை காலியான கல்லறை நமக்கு கற்றுத் தருகிறது.

உயிர்ப்பு என்பது தியாகத்தை நமக்குக் கற்றுக் தரும் நிகழ்வு. சிலுவை என்பது வெறுமனே ஒரு கொலைக்கருவி அல்ல. அல்லது அது இயேசுவின் மரணத்தைப் பற்றி மட்டும் சிந்திக்கும் இடம் அல்ல. இயேசுவின் மரணம் தியாகத்தின் வெளிப்பாடு. அவர் வலுக்கட்டாயமாய்க் கொல்லப்படவில்லை, சுய விருப்பத்தோடு தன்னைக் கையளித்தார். பிறருக்காக, மனுக்குலத்துக்காக, பாவிகளின் மீட்புக்காக தன்னைக் கையளித்தார். தன்னை இழந்தும், பிறரை வாழவைக்கும் பேரன்பை நமக்குக் கற்றுத் தந்தார். உயிர்ப்பு அத்தகைய உயரிய தியாகத்தை நாம் கொண்டிருக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறது.

உயிர்ப்பு தடைகளை உடைக்கும் நிகழ்வு. மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே இருந்த தூரத்தை, இயேசுவின் வருகை நெருக்கமாக்கியது. கடவுளோடான உறவை வலுப்படுத்தியது. நாம் நமது சக மனிதர்களிடையே காட்டுகின்ற இடைவெளியை, நிராகரிப்பை, புறக்கணிப்பை விலக்கி விட உயிர்ப்பு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஒப்புரவையும், சமாதானத்தையும், அன்பையும், பிறரோடு பகிர வேண்டும் எனும் செய்தியைச் சொல்கிறது. ஏனெனில் இயேசு அனைவருக்காகவும் இறந்தவர். அவர் அனைவருக்காகவும் உயிர்த்தவர். அனைவரையும் மன்னித்தவர். அவர் கட்டாத மதில் சுவரை, நாம் கட்டக் கூடாது என்பது உயிர்ப்பு சொல்லும் பாடம் !

உயிர்ப்பு ஒரு புதிய தொடக்கத்தின் அழைப்பு. பழைய தோல்விகளில் சோர்ந்திருப்பவர்களுக்கான நம்பிக்கையின் ஒளி. ஒரு புதிய பாதையின் முதல் சுவடு. பழையவற்றிப் புதைந்து போகாமல், புதியவற்றில் புகுந்து போக நமக்கு தரப்படும் அழைப்பு. இயேசு தனது கல்லறையிலிருந்து வெளியே வந்தது போல, நம்பிக்கையின்மையின் கல்லறைகளிலிருந்து இருந்து நாம் வெளியே வர முடியும் எனும் நம்பிக்கையின் நிகழ்வு உயிர்ப்பு. எல்லாவற்றுக்கும் மேலாய், உயிர்ப்பு என்பது அன்பின் வெளிப்பாடு. உண்மையான அன்பு என்பது பெறுவதில் அல்ல, கொடுப்பதில் என்பதைக் கற்றுக் கொடுத்த நிகழ்வு. உண்மையான அன்பு என்பது சுயநல வாழ்வல்ல, பிறருக்கான வாழ்வு என்பதைப் போதித்த நிகழ்வு. உயிர்ப்பினை வெறும் மத நிகழ்வாய்க் கொண்டாடாமல் அது சொல்கின்ற, நம்பிக்கை, மீட்பு, அன்பு, தியாகம், சமத்துவம் எனும் சிந்தனைகளோடு இணைத்து கொண்டாடினால் ஈஸ்டர் அர்த்தம் பெறும்.

**அனைவருக்கும் உயிர்ப்பு நல்வாழ்த்துகள்**



# Mega மகளீர் விருது விழாவில் விருது பெற்ற இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன்

Mega TV Mega TV Tamil கடந்த 16 வருடங்களாக நடாத்தி வரும் Mega மகளீர் விருதுவிழாவில் ஈழத்தின் இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன் அவர்களை கௌரவப் படுத்தியது. சாதனைகளை படைத்த பெண்களை ஒவ்வொரு வருடமும் திருமதி. ஜெயந்தி தங்கபாலு மற்றும் அவரது கணவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான, திரு. தங்கபாலு அவர்களும். தேடி கண்டு பிடித்து, அவர்களை பாராட்டியும் கவுரவப்படுத்தியும் மகிழ்விப்பார்கள்.அவர்கள் Mega TV யின் உரிமையாளர்கள். இன்று மார்ச் 8.2025 சாதனை விருது பெற்றவர்கள்: அரசியலில் தன் கணவன் பாதையை தொடரும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் (DMDK). பழம்பெரும் நடிகை வடிவக்கரசி அம்மா, முனைவர் பேச்சாளர் திருமதி. பாரதி பாஸ்கர், ஈழத்தின் இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன், திருமதி. வித்யா சுதர்ஷன், திரு. சுதர்ஷன். இந்த விழாவை திறம்பட வழிநடத்தி சென்றவர் நடிகை மற்றும் நடனக்கலைஞர் திருமதி. பிரியதர்ஷினி அவர்கள். திருமதி.ரேவதி சங்கரன் ஏற்கனவே இந்த விருதை பெற்றவர். இத்தனை பெருமைக்குரியவர்களின் மத்தியில் இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன் அவர்களைத் தேர்வு செய்து 2025 ஆண்டிற்கான ஆநபய மகளீர் விருதை கொடுத்தமை மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. பிரபாலினி ஈழத்து மெல்லிசை மன்னன் பரமேஸ் அவர்களின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெண்களின் பாரிய பிரச்சினைகள்:



## தாய்மார் ஆண்பிள்ளைகளில் வைக்கும் அளவுகடந்த பாசம்

பெண்களின் பிரச்சினைகள் பல இருந்தாலும் பெண், ஆண், திருமணம் ஆகிய மூன்றும் பாரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. முதலாவதாகப் பெண்கள் தம்முடைய பலத்தைத் தாம் அறிந்து கொள்ளாமையும், தாய்மார் ஆண்பிள்ளைகளில் வைக்கும் அளவுகடந்த பாசமும் பெண்களுக்குப் பாரிய பிரச்சினையை சமூகத்தில் ஏற்படுத்துகின்றன.

### பெண்கள் பலம்:

ஆண்களால் ஒரே சமயத்தில் பல வேலைகளைச் செய்ய முடிவதில்லை. பெண்கள் ஒரே சமயத்தில் பல வேலைகளைச் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள். ஆண்களுக்கு மொழி மையத்தின் அளவும் சிறிதாக இருப்பதாலே ஆண்கள் பேசுவது குறைவாகவே இருக்கின்றது. நிஜமாக ஆண்களுக்கு சமய சந்தர்ப்பம் அடைந்து சாமர்த்தியமாக பேசவும் தெரியாது. முகக்குறிப்புகளையும் இலகுவில் அறிந்து கொள்ள மாட்டார்கள்.

ஆனால், பெண்கள் இவ்விடயங்களில் சாமார்த்தியசாலிகள். அதேபோல் இதைவிட ஒரு விடயத்தை அவதானித்தல், மனநிலை, கவலை போன்றவற்றை வெளிப்படுத்தல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் ஆண்களின் மூளையை விடப் பெண்களின் மூளையே தெளிவாகச் செயற்படுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வுகளின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்கள். இதை அறியாத பெண்கள் யாரையாவது எதிர்பார்க்கின்ற தன்மையும் பாதுகாப்புக்காக ஏங்குகின்ற தன்மையும் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

*நிமிர்ந்த நன்னடை*
*நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும்*
*அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச்செருக்கும்*
*இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையும்*



என்று பாரதியார் பெண்களைப் பற்றிப் பாடியிருக்கின்றார். ஞானம் என்பது பற்றி ஆறுமுகநாவலர் சொல்லும் போது பகுத்தறிவுச் சுடர் என்கிறார். ஆகவே பெண்களிடம் பகுத்தறிவு சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது என்னும் போது எதையும் பாகுபடுத்தி நல்லவை தீயவை பற்றி அறிகின்ற அறிவு அவளுடைய வாழ்க்கையின் பாதுகாப்புக்குப் போதுமானது. மனிதர்களுக்கு தாம் என்ன இனம் என்று அடையாளத்தை தருவதே தாய் தான். உதாரணமாக மிருகக்காட்சிச் சாலையிலே பணி செய்கின்ற ஒரு பெண்ணுக்குப் பிள்ளைகள் இல்லை. ஒரு குரங்கு குட்டியை எடுத்துப் பிள்ளை போல் வளர்த்தார். அந்த குரங்கு குட்டி மிகச் சிறப்பாகப் படங்கள் வரையக் கூடிய தன்மை உடையதாக இருந்தது. ஒரு மனித பெண்ணோடு வளர்க்கப்பட்ட குரங்கு தன்னை மனிதனாகவே நினைத்தது. சிம்பன்சி பெண்களை அந்த குரங்குக்குப் பிடிக்கவில்லை. அவற்றுடன் பழகுவதற்கு அது விரும்பவில்லை. ஆகவே என்ன இனம் என்று அடையாளத்தை ஏற்படுத்துவது கூட தாயே தான். எந்த இனமோ அந்த இனத்திலேயே துணை தேடுவது உயிரினங்களில் களவியல் லாஜிக்.

அன்றிலிருந்து இன்று வரை பெண்ணே தன்னுடைய கணவனைத் தெரிவு செய்கின்றாள். காட்டுவாசிப் பெண் காம சுகம் விகிதத்தை வைத்துத் தான் ஆண்களைத் தெரிவு செய்தாள். குகை வாசியான பெண் வேட்டுவ வீரியத்தை வைத்து ஆண்களை தெரிவு செய்தாள்.



கௌசி சிவபாலன் (யேர்மனி)

ஆதிவாசியான பெண் பாதுகாப்பு விகிதத்தை வைத்து ஆண்களைத் தெரிவு செய்தாள். இளவட்டக்கல்லைத் தூக்கித் திருமணம் செய்தது. சீதையை மணம் முடிப்பதற்காக சிவதனுசு வில்லை நாண் பூட்டி உடைத்தல் வீரமுடைய ஆண்மகளைத் தெரிவு செய்தமைக்கு அடையாளம். ஆரம்ப நாகபீக பெண் அறிவு விகிதத்தை வைத்து ஆணின் செல்வாக்கு செல்வத்தை வைத்து தேர்வு செய்தாள். ஆனால் இன்று பெண்கள் அந்தஸ்துள்ள ஒரு ஆணைத் தேர்ந்தெடுத்தாலேயே அவனுடைய உச்சகட்ட அந்தஸ்தைக் கொண்டு பிள்ளைகளை வளர்த்த ஆளாக்க முடியும் என்று நம்புகின்றாள். ஆனால், பொதுவாகத் தன்னுடைய வாழ்க்கையை சுயமாக வாழ முடியாத ஆண்களை எந்தப் பெண்களும் விரும்புவதில்லை. ஆனால், சில ஆண்கள் யாரையாவது தங்கி வாழுவார்கள். அம்மா சொல்வதைத்தான் கேட்பார்கள். இல்லையென்றால், மனைவியின் பேச்சுக்கு அடிமையாக இருப்பார்கள். இந்த வகையான ஆண்களை இப்போது பெண்கள் விரும்புவதில்லை. இதனாலேயே விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன. இப்போது ஆண்களுடைய ஆண்மையைக் கொடுக்கின்ற ரெஸ்ரோஸ்ரீரோன் என்னும் ஹோர்மோன் குறைவாகச் சுரப்பதாகக் கூறப்படுகின்றது.

### தாய்மார் ஆண்பிள்ளைகளில் வைக்கும் அளவுகடந்த பாசம்:

மார்க்ரெட் மேலர் அமெரிக்காவில் பணியாற்றிய ஒரு மனநல மருத்துவர். தாய்சேய் உறவில் பல நிலை இருப்பதை ஆராய்ந்தாராம். ஒரு பிள்ளைக்கு மூன்றுமாதத்தின் பின் தாயை மட்டும் நன்றாகத் தெரியும். நான் என்றால் நான் என்பதும் அம்மா என்பதும் ஒன்றுதான். அம்மா என்னோடு இருந்தால் தான் என்னால் இயங்க முடியும். அம்மா என்னோடு இருந்தால் பாதுகாப்பு உணர்வை நான் பெறுகின்றேன் என்று ஒரு பிள்ளை நினைக்கும்.

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்





# சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் மகளிர் தின ஒன்றுகூடலில் மூன்று பெண்கள் 'விழிசைச்சிவம் நல்ல பெண்மணி' விருது பெற்றனர்

08.03.2025 இல் நடைபெற்ற சோலைக்குயில் அவைக்காற்றுக்களத்தின் மகளிர் தின ஒன்றுகூடலின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் ஆரத்தி சுற்றி மலர் கொடுத்து அழைத்து வரப்படுகிறார்கள். விருந்தினர்களாக தேசியகலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த பதில் நீதிபதி,சிரேஷ்ட சட்டத்தரணி திரு சோ.தேவராஜா, தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரத்தினம் செல்வகுமாரி, அளவெட்டி அருணோதயக்கல்லூரி அதிபர்





திரு த.தயானந்தன். பிள்ளைகள் ஜிந்துஷா விளம்பிதன்,ஹறிணிகா கௌரிதரன் ஆகியோர் யாவருக்கும் பன்னீர் தெளித்து, நடனமாடி அழைத்துவந்தார்கள். நிகழ்வின் ஆரம்பத்தில் புலவர்.ம.பார்வதிநாதசிவம் இயற்றிய ""கனிமொழியே ,தனிமொழியே ""என்று தொடங்கும் தமிழ் வாழ்த்து மாண்டு ராகத்தில் இசைக்கப்படுகிறது. நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

அன்றையதினம் "ஒரு சோகம் இறுகும் போது "" சிறுகதா நிகழ்வும் இடம்பெற்றது. மகளிர் தின ஒன்றுகூடலில் மூன்று பெண்கள் ""விழிசைச்சிவம் நல்ல பெண்மணி விருது ""பெற்றுக்கொண்டார்கள். குழந்தை மருத்துவ நிபுணர் பேராசிரியர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் ,எழுத்தாளர் திருமதி புனிதவதி சண்முகலிங்கம், ஆசிரியர் திருமதி ராஜி கெங்காதரன் ஆகியோரே அவர்கள்.இந்தப்புகைப்படத்தில் மருத்துவநிபுணர் அவர்கள் தனது விருதை, பிரதமவிருந்தினர் திரு சோ.தேவராஜா,தெல்லிப்பழைப் பிரதேச உதவிச் செயலர் திருமதி நேசரத்தினம் செல்வகுமாரி ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.அரிய நிகழ்வுகளை அழகாக நடத்திவரும் கோகிலா மகேந்திரன் அவர்களுக்கும் அவைக்காற்றுக் களத்தின் உறுப்பினர்கள் யாவருக்கும் வெற்றிமணியின் வாழ்த்துகள்.






## வாராரு வாராரு... அழகர் வாராரு...!

# அழகர் கோயில் மதில் சுவர்கள் மட்டுமே ஒருமைல் சுற்றளவு கொண்டிருக்கிறது!

தமிழகத்தில் நூற்றியெட்டு வைஷ்ணவத் திருத்தலங்களில் ஒன்றான ".. அருள்மிகு கள்ளழகர் திருக் கோயில்.." மதுரை மாநகரில் அமைந் துள்ளது.

சுந்தரராஜ பெருமாள் எனும் திருநாமத் துடன் கையில் சங்கு, சக்கரம், வி ல், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் வலப்புற த்தில் திருமகள், இடப் புறத்தில் மண்மகள் கிழக்கு நோக்கியும், மூலவர் பரமஸ்வாமி நின்ற கோ லத்திலிலும் காட்சி தருகி றார். எம்பெருமானின் கையில் உள்ள சக்கரம் பக்தர்களிடமிருந்து அபயக்குரல் வந்தால், கணநேரமும் தாமதிக்காமல் துஷ்டர்களை அழிக்க வேண்டும் என்ப தற்காக சக்கரத்தைப் பிரயோக நிலையி லேயே வைத்திருக்கிறார்.தனிசன்னதியில் கல்யாண சுந்தரவல்லி தாயார் எழுந்தருளி பெயருக்கு ஏற்றவாறு ஏகசௌந்தர்யமாக விளங்கி அருள்பாலிக்கிறார்.

சுந்தரராஜ பெருமாளுக்கு பதினெட் டாம்படிக் கருகருப்பண்ணசாமியே தோள் கொடுக்கும் தோழன் அல்லது முதன்மை மெய்காப்பாளர் என அனைத் துமாக விளங்கி காவல் காத்துக் கொண்டிருக்கிற ஐதீகமாகும்..!

ஆகவே தான் அழகர் கோயிலுக்குள் நுழைந்தவுடன் பக்தர்கள் "..பதினெட் டாம் படிக் கருப்பண்ணசாமியை.." முதலில் கும்பிட்டு பிரசாதமாக வழங்கு ம் விபுதியை நெற்றி நிறைய பூசிக்கொண்டு அழகரை தரிசிக்கச் செல்கிறா ர்கள் இது காலம் காலமாக தொடர்கிறது.

அழகர் கோயில் மதில் சுவர்கள் மட்டுமே ஒருமைல் சுற்றளவு கொண்டிருக்கிறது, பலசிறிய மலைகள் நாலாப்பக்கமும் பிரி ந்து ஒட்டு மொத்தமாக கழுகு பார்வையில்



பார்க்கும் போது "..காளை வடிவம்.." போல காட்சி தருகிறது.

அழகர் மலை என்றாலும் கீழே தான் கோயில் அமைந்துள்ளது மலையி ல் உள்ள ராக்காயி அம்மனை தரிசித்து விட்டு நூபுரகங்கை தீர்த்ததிற்கு சென்று பக்தர்கள் நீராடுவது வழக்கமாக உள்ளது மலைக்கு செல்ல தே வஸ்தான பேருந்து வசதி உள்ளது.

முருகனின் அறுபடைவீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலையில் "..அருள்மி கு சோலைமலை முருகன் திருக்கோயில்.." ராக்காயி அம்மன் கோயிலுக் கு செல்லும் வழியில் அமைந்திருக்கின்றது முருகன் வள்ளி தெய்வானை யுடன் இணைந்து அருள்பாலிக்கிறார்கள். அழகர் கோயி லின் இரண்டு முக்கியத் திருவிழாக்களில் ஒன்று ஆடிமாதம் "..ஆடித்தேர்த் திரு விழா.." நடைபெறும் இன்னொன்று உலக பிரசித்தி பெற்ற சித்திரைத் திருவிழா.." அழகர் கோயில் மற்றும் மீனாட்சி கோயில் சா ர்பாகவும் மொத்தம் 22 நாட்கள் நடை பெறுகிறது.

அழகர் கோயில் மலையிலிருந்து தங்கப்பல்லக்கில் புறப்படும் கள்ளழகர் விடியற் காலையில் லட்சக்கணக்கில் வெள்ளமெனக் கூடியுள்ள பக்தர்க ளின் நடுவிலிருந்து "..கள்ளழகர் வைகையா ற்றில் இறங்கி.." அருள்பாலி க்கிறார்.

ஒவ்வொரு மண்டகப்படியாக செல்லும் கள்ளழகர் மண்டுக முனிவருக்கு சாபவி மோசனம், தசாவதாரம் போன்ற அனை த்து புராண நிகழ்வினை ந டத்தியும், ஏற்றுக்கொள்ளும் கள்ளழகர் வழிநெடுகி லும் பக்தர்களின் வர வேற்பைப் பெற்றுக் கொண்டு திரும்பவும் அழகர் மலைக்கு திரும்புகிறார்.

அழகர் கோயிலின் "..பலவகை தானி யங்களுடன் கருப்பு உளுந்தில் நெய் யுடன் சேர்த்து செய்து பெருமாளுக்கு படைக்கப்படும் சம்பா தோசை.." இக் கோயில் பிரசாத ஸ்டால்களில் கிடை க்கும் மறக்காமல் வாங்கி சாப்பிடுங்க அப்பத்தான் பெருமாளை தரிசித்த பலன் முழுமையாக கிடைத்த மாதிரி இருக்கும்..! மதுரையில் சித்திரைத் திருவிழா நாட்க ளில் "..வாராரு வாராரு அழகர் வா ராரு சப்ரம் ஏறி வாராரு நம்ம சங்கடம் தீர் க்கப் போறாரு.." மற்றும் "..பல் லாக்கு குதிரையில பவனி வரும் மீனாட்சி.." எனும் பாடல்கள் திரும்ப திரும்ப ஒலித் துக் கொண்டே இருக்கும் கேட்கும் போது பக்தர்களிடம் இறை பக்தி உடலெங்கும் புத்துணர்வாக தூண்டி விடும் என்பதில் ஐயமில்லை..!

இக்கோயில் எங்குள்ளது..?

மதுரை நகரிலிருந்து வடக்கே 22 கி/மீ தூரத்தில் இக்கோயில் அமைந்தி ருக்கிறது பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 44 ஆம் நம்பர் வழித்தடம் கொண்ட பேருந்து அடிக்கடி இயக்கப்படுகிறது.

தமிழக அரசு இந்து அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இக் கோயில் காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரை மீண்டும் மாலை 3.30 மணி முதல் 8.00 மணி வரை நடை திறந் திருக்கும்.

கட்டுரை: படங்கள் மதுரை ஆர்.கணேசன்







# முள்ளிவாய்க்கால் மண்ணில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை

## என் கடன் பணி செய்து கிடப்பதே


முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மண்ணில் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ள சிவபூமி அறக்கட்டளை பணிகளில் முக்கியமாக சிவ பூமி மனவிருத்தி பாடசாலை அமைப்பதற்காக ஆரம்ப கட்ட வேலைகளை இன்று எமது சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் இன்று (19.03.2025) ஆரம்பித்து வைத்தவேளை.

-------------

திருக்கோணமலை திருக்கோணேஸ்வரம்.

இன்று இந்திய தூதரக உயரதிகாரிகள் திருப் பணி வேலைகள் தொடர்பாக நேரில் ஆராய்ந்து விபரம் பெற்றுச் சென்றனர்.

என் கடன் பணி செய்து கிடப்பதே என நாள்தோ றும் சிந்தித்து, இயன்றவற்றை செய்துவரும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனுக்கு எம் வாழ்த்துகள்.



# வாசனைத் திரவியம்

நாங்கள் மெல்ரன் என்னும் பிரதேசத்துக்கு, புதிதாகக் குடிபெயர்ந்து போனோம். வீட்டிற்கு வந்த அன்று இரவு, கராஜ்ஜிற்குள்ளும் கார்டன் செட்டிற்குள்ளும் பலத்த ஆரவாரம் கேட்டது. ஏற்கனவே அங்கு குடியிருக்கும் எலிகள், புதிதாக வந்திருந்த எம்மை வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

பகல் முழுவதும் வீடு மாறிய களைப்பில் இருந்த எங்களுக்கு, அவர்களின் ஆரவாரம் எரிச்சலைத் தந்தது. இரவு முழுவதும் உறங்கவிடாமல் அவர்களின் கொண்டாட்டம் நடந்தது.எங்களுக்கும் அவர்களுக்குமிடையே இருந்த பொதுவான சுவரைத் தட்டி, அவர்களைக் கொஞ்சம் சத்தம் போடாமல் இருக்குமாறு கேட்டுக் கொண்டோம். சிறிது நேரம் அமைதி காத்த அவர்கள், ஹகறக-கறக்' என்று சுவரைச் சுரண்டி தங்கள்




இருப்பை நிலைநாட்டினார்கள். மனைவி அவர்களின் பாணியில், தானும் சுவரை விறாண்டி, உள்ளே மூன்று பெரிய எலிகள் இருக்கின்றோம் எனச் சமிக்கை செய்தார். கொஞ்ச நேரம் பயந்துபோய் இருந்தார்கள். பின்னர் மீண்டும் அவர்கள் தமது விளையாட்டைத் தொடங்கினார்கள். இரு பகுதியினருக்குமிடையே உக்கிரமான போர் விடியும் வரை தொடர்ந்தது.

மறுநாள் காலையில், மெல்ரன் கவுன்சிலில் வேலை செய்பவர்களிடம் தொடர்பு கொண்டு இது பற்றி முறையிட்டேன்.

“மெல்ரன் பிரதேசத்திற்கு குடிபெயர்ந்து வந்திருக்கும் உங்களுக்கு முதலில் எமது வணக்கத்தையும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்“ என்று ஆரம்பித்த ஒரு பெண்மணி, “நீங்கள் குடிபெயர்ந்து வந்த இந்தப் பிரதேசம் கங்காருக்கள், எலிகள் போன்றவற்றின் வாழ்விடம் ஆகும். அந்த விலங்குகளைத் துரத்தி, அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட நகரம் இது. ஆகையால் நாங்கள் உங்கள் பிரச்சினைக்கு ஒன்றும் செய்வதற்கில்லை“ என்று தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார். அவரின் கூற்று, எலிகளுடன் ஒத்து வாழுங்கள் என்று சொல்லுவதுமாப்போல் இருந்தது.

அன்று பணிங்ஸ் என்ற கடைக்குச் சென்று, பொறிகளையும் எலிகளைக் கொல்லும் சில விஷ மருந்துகளையும் வாங்கி வந்தோம். அவற்றை எலிகள் நடமாடும் இடங்களில் பரப்பி வைத்துவிட்டு அன்றிரவு உறக்கத்திற்குச் சென்றோம்.முதல் நாளைப் போல இரவு ஆரம்பித்ததும் கொண்டாட்டம் தொடங்கியது. சிறிது நேரத்தில் பொறிக்குள் மாட்டிக் கொண்ட எலிகளின் ஹகுய்யோ முறையோ' சத்தங்கள் கேட்கத் தொடங்கின. இரவு முழுவதும் எம்மைத் திட்டியபடி அவை அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. இரண்டு வாரங்களில் அவை கொத்துக் கொத்தாக பொறிகளில் மாட்டியும், விஷ மருந்தை உட்கொண்டுவிட்டு விழுந்து கிடந்ததையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவற்றைப் பொறுக்கி எறியும்போது மனம் கனத்தது. அவற்றைக் கொல்லாமல் துரத்துவதற்கு ஏதாவது வழி இருக்கின்றதா என மந்திராலோசனை செய்தோம். பூனைதான் ஒரே வழி என நான் சொன்னேன்.



**கே.எஸ்.சுதாகர்**
(அவுஸ்ரேலியா)

“பூனையா? அடுத்தடுத்த வீடுகளில் தான் நிறையப் பூனைகள் இருக்கின்றனவே“ பூனை வளர்ப்பதில் பிரியமில்லாத மனைவி பதில் தந்தார்.“இங்கே இருக்கின்ற எலிகள் பூனைகளுக்குப் பயப்படுவதில்லை“ என்று சொன்ன மகன், எங்களைக் கூட்டிச் சென்று முன்வீட்டின் முற்றத்தைக் காண்பித்தான். முன்வீட்டு முற்றத்தில் ஒரு கொழுத்த பூனை ஒன்று உறங்கிக் கொண்டிருப்பதையும், அதுக்கு அண்மையாக சில எலிகள் ஓடித்திரிவதையும் கண்டோம். ஒருநாள் இரவு, பூனை போல் மெதுவாகப் பதுங்கி சுற்றுப்புறத்தை நோட்டம் பார்த்தேன். இரண்டு பக்கத்து வீடுகளில் இருந்தும், வேலிகளுக்குக் கீழாக எலிகள் எங்கள் வீட்டை நோக்கி படையெடுத்து வருவதையும், எமது வீடுகளில் இருந்த ஒருசிலர் அவர்களுக்குக் கைலாகு குடுத்து வரவேற்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இனி ஒன்றும் செய்வதற்கில்லை என முடிவெடுத்து, சளைக்காமல் பொறிகளையும் மருந்துகளையும் தொடர்ந்து வைத்து வந்தோம்.

நாளாக எலிகளின் இருப்பு குறைந்ததேயொழிய முற்றாக நின்றுவிடவில்லை. வீடு மாறி வந்து, பெட்டிகளில் அடிக்கிக் கொண்டு வந்த பொருட்களை எடுத்து மறுபடியும் அடிக்கி வைக்க இரண்டு மாதங்களாகி விட்டன.

“இதைத் தூக்கி மூண்டுதரம் தலையைச் சுத்திப்போட்டு எறிஞ்சு விடுங்கோ“ என்று சொல்லியபடியே ஒரு நறுமணப் போத்தலைத் (lancome la) தந்தார் மனைவி. “லங்கம் லா வாசனைத் திரவியம் அது. அட- 150 டொலர்கள் குடுத்து வாங்கியதல்லவா?“ “உங்களை ஒரு சின்னப் போத்தலாத்தான் நான் வாங்கித் தரச் சொல்லிக் கேட்டனான். நீங்கள் என்னண்டா வருஷம் முழுக்க வைச்சுப் பூசலாம் எண்டு சொல்லி பெரிசா வாங்கித் தந்தியள். இது ஒரு பொல்லாத நஞ்சு. இதை அடிச்சுப்போட்டுப் போனா மூச்சுத் திணறுது. ஆக்கள் எல்லாம் கிட்ட வராமல் ஓடினம்.“

“25 மில்லி லீட்டர் போத்தல் 70 டொலர். 100 மில்லி லீட்டர் போத் தல் 150 டொலர். பெரிசா எடுத்தா மலிவு எண்டுதான் வாங்கித் தந்த னான். சென்ரை ஒரு எப்பன் தொட்டு கையிலை ஒரு எல்லுப்போல வைக்க வேணும். நுளம்புக்கு அடிக்கிற மருந்தைப் போல அடிச்சா மூச்சுத் திணறாம என்ன செய்யும்?““உங்கட வேலையிடத்திலை உங்கட நண்பி பூசிக்கொண்டு வாறாள் எண்டு சொல்லித்தான் எனக்கும் வாங்கித் தந்தனியள். உங்கட பியூட்டி குவீன் ஏன் பூசிக்கொண்டு வாறவள் எண்டது தெரியுமோ? ஆம்பிளையள் தொல்லை தாங்காமல், நீங்கள் எல்லாம் கிட்ட வரக்கூடாது எண்டுதான்“

“எட“ நல்ல ஐடியா ஒண்டு சொல்லியிருக்கிறீர். இதை நாங்கள் எலி வந்து போற இடங்களுக்கு அடிச்சா எப்பிடி இருக்கும்?“உடனே அந்த திட்டத்தை நிறைவேற்றினேன். ஹஎலிகளின் ராஜ்ஜியத்தில் லங்கம் லா லா' என்று பாடிக்கொண்டே, கராஜ் கார்டன்செட் முழுவதும் அந்த பெர்வியூமை சிவி றிவிட்டு அவற்றின் கதவுகளை உடனே இறுகப் பூட்டிக் கொண்டேன். “உதென்னப்பா உங்கட உடம்பு முழுக்க இவ்வளவு நாத்தம் நாறுது. முதலிலை உங்கட உடுப்புகளைத் தோய்ச்சுப் போட்டு, குளிச்சு முழுகி வீட்டுக்குள்ளை வாருங்கோ.“ சன்னதம் கொண்டார் மனைவி. இரவானதும் எலிகள் எல்லாம் தப்பித்தோம் பிழைத்தோம் என வீட்டைக் காலி செய்துவிட்டுக் கிழம்பிப் போவது போன்ற சத்தம் கேட்டது. இரவு பத்து மணிக்குப் பின்னர் வீடு மயான அமைதி கொண்டது.

காலையில் பார்த்தபோது ஒரு எலி தன்னும் இறந்து கிடந்ததைக் காணவில்லை. அன்று முதல் எலிகளின் கொட்டம் அடங்கியது.

அடுத்த வாரம் வேலைக்குப் புறப்பட்டபோது, பக்கத்து வீட்டுக்காரர் புன்முறுவலுடன்


28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்







# பாலியில் ஒரு இராமேஸ்வரம் புனித தீர்த்த எம்புல் கோவில்

**பாலி** சனத்தொகையில் 86 சதவிதம் இந்துக்கள். அவர்களது வாழ்க்கைமுறையும், இந்துகளின் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியது. அங்கு 'தீர்த்த எம்புல் கோவில்' (TIRTA EMPUL TEMPLE) அமைந்துள்ளது.

இக்கோவிலை இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலுடன் ஒப்பிடுவார்கள். அது சிவனுக்குரிய கோவிலாகும். இராமர் இங்கு சிவனை வழிபட்டதாக நம்பப்படுகின்றது. இக்கோவில் இந்து சமயத்தின் பிரிவுகளான சைவம், வைணவம் இரு சமயத்தினருக்கும் முதன்மையாக உள்ளது. அங்கு 22 தீர்த்தப் பகுதிகள் உண்டு.

பாலி 'புனித தீர்த்த எம்புல்' கோவிலின் நுழைவு வாசலில் பசுமையான தோட்டங்கள் மற்றும் வெப்பமண்டல தாவரங்களுக்கு மத்தியில் சிலைகள் பல அமைக்கப்பட்டுள்ளது. நுழைவு வாசலுக்கு பின்னால் அமைந்துள்ள குளங்கள், அழகிய சிலைகளுடன் இயற்கையும் இணைந்து அற்புதமாகக் காணப்படுகிறது.

**மாதவி (யேர்மனி)**



இங்கு வரும் பக்தர்கள், இங்குள்ள புனித நீரில் நீராடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். கோவிலுக்குள் எவ்வாறு, செல்லவேண்டும், என்பதில் ஆடைமுதல், ஆள்வரை சில நடைமுறைகளைப் பேணவேண்டும்.இது இனம், மதம் கடந்த ஒரு நடைமுறை. ஆண்களும் பெண்களும் முழங்காலை மூடும் வண்ணம் சறம், (லுங்கி) கட்டிச் செல்லவேண்டும்.

வெளிநாட்டவர்களுக்கு நுழைவுக் கட்டணமாக 75 ஆயிரம் பாலி காசு அறவிடப்படும். (யூரோ வில், 5 €, பவுண்ஸ் என்றால் 4 £)

உள்ளே சென்றதும் நீங்கள் லுங்கி அணியவில்லை என்றால், அங்கு உங்களுக்கு லுங்கி கட்டிவிடுவார்கள். திரும்பும்போது மீண்டும் அவர்களிடம், ஒப்படைக்கவேண்டும். உள் சென்றதும், விஷ்ணு, சிவன், பிரமன், மூவருக்கும் படையல் வைத்து வணங்குவார்கள். படையல் நம்ம ஊர் படையல்போல் எண்ணவேண்டாம். சிறிய தென்னங் குருத்து ஓலையால் இழைக்கப்பட்ட சிறு பெட்டியில் பூ, பழம், பச்சிலையும் வைத்து வணங்குகிறார்கள்.

இந்த வழிபாடு சுதந்திரமானது. உங்கள் விருப்பப்படி செய்யலாம். அங்கு வழிபாட்டு முறை தெரியாதவர்களுக்கு ஒருவர் வழி காட்டுவார். அந்த வழிபாட்டிலும், புனித தீர்த்தத்தில் நீராடுபவர்களும், பச்சை நிறத்தில் துணியை உடலில் போர்த்தி சுற்றி அணிந்திருப்பார்கள். பாலியில் உள்ள மிகப்பெரிய நீர் கோவில்களில் ஒன்றாக, தீர்த்த எம்புல் திகழ்கிறது. தீர்த்த எம்புல என்பது பாலி மொழியில் புனித தீர்த்தம், எம்புல என்பது பூமிக்கு அடியில் இருந்துவரும் நீரூற்று என்று பொருள்.

இந்த தீர்த்தம் மலையடிவார ஊற்றில் பிறந்து வருகிறது. இந்த நீர் 30 வீழ்ச்சியாக குளத்தில் விழும்படி அமைக்கப்பட்டுள்ளது. குளம் மூன்றாக பிரிக்கப்பட்டு உள்ளது. புனித நீர் குடத்தில் இருந்து பாய்வதாக அமைக்கப்பட்டு உள்ளது.

நீராடுபவர்கள், பச்சை ஆடையுடன் ஒவ்வொரு ஊற்றாக 28 நீர் வீழ்ச்சியிலும் வரிசையாக தலையை வைத்து நனைத்துச் செல்வார்கள். ஒன்றில் மட்டும் நனைத்தும், செல்லலாம், குளத்தில் இறங்கிட முடியாதவர்கள், வீழ்ச்சியில் நீரெடுத்து தலையை நனைக்கலாம். 30 நீர் வீழ்ச்சியில் கடைசி இரண்டும், யாவரும் தலை நனைப்பதற்கு அல்ல. அது இறந்தவர்கள் நினைவாக குளிக்கும் நீர் வீழ்ச்சி எனப்படுகிறது.

குளத்தில் அதிகமாக இளையவர்கள், வெளிநாட்டு உல்லாச பயணிகள் என பல பச்சை ஆடைகளே நிறைந்து காணப்படுகின்றன. பாலியில் உள்ள இந்து சமய மக்கள் பலரும் இந்த புனித நீரையே, பல சடங்குகளுக்கும் பயன்படுத்துவதாக சொல்லப்படுகிறது. மேலும் கோவில் விழாக்கள் பலவற்றுக்கும் இந்த புனித நீர் கொண்டு சென்று பயன்படுத்தப்படுகிறது. இங்கே விஷ்ணு, சிவன், பிரமா முக்கியமான தெய்வமாக வழிபடப்படுகிறார்.

இயற்கையை இறைவனாக காண்பவர்கள் நிச்சயம் இங்கு ஒருமுறை செல்லலாம். இந்த ஆலயம் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.





## வடமாகாணத்தில் முதல் பெண் Starter!

உடுவில் மகளிர் கல்லூரியின் மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் வடக்கு மாகாணத்தில் முதல் பெண் ஆரம்பிப்பாளராக (Starter) உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் பயிற்றுனர் திருமதி கிருத்திகா சஞ்சயன் அறிமுகம் செய்யப்பட்டார். இவர் ஆரம்பிப்பாளர் கனகராஜ் முன்னிலையில் ஆரம்பித்தார்.



# உங்களது வளர்ச்சி பிறரின் பாராட்டுகளால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று நினைக்காதீர்கள்!

**வாய்ப்புகளில் வயிறெறிபவர்களுக்காக....**

வாய்ப்புகளைத் தேடிச் செல்பவர்களை விட வாய்ப்புகளை உருவாக்குபவர்களுக்கே வாழ்க்கை குறைந்தபட்சம் ஏதோவொன்றைப் பரிசளிக்கின்றது. அதுவும் தொடர் முயற்சிகளின் பின்பே.

சில முயற்சிகளோடு தளர்ந்துபோனவர்கள் விடாமுயற்சியாளர்களைப் பார்த்துப் பொறாமை கொள்வது வழமை தான். ஆனாலும் அவர்கள் ஆற்றாமையில் அள்ளியிறைக்கும் வார்த்தைகளும் செயல்களுமே அவர்கள் யாரென்பதை உணர்த்திவிடும்.

ஒவ்வொரு வாய்ப்புகளையும் உருவாக்கும் முயற்சியின் பின்னால் எண்ணற்ற தோல்விகளும் வேதனைகளும் மறைந்திருப்பதை வெளியே இருந்து பார்ப்பவர்களால் உணரவே முடியாது. அவர்களைப் பொறுத்தவரை அடுத்தவர்களுக்குக் கிடைக்கும் வெற்றியென்பது எந்த உழைப்புமின்றித் தானாகக் கிடைப்பதாகவே



கருதிக்கொள்வதுதான் அவர்களின் உச்சகட்ட கணிக்கும் திறனாகும்.

கடும் போராட்டங்களின் பின் வெற்றிக் கனியை எட்டுபவர்களிடம் அதைச் சுவைக்கும் உரிமை தனதே எனக் கூறிக் கொண்டு சிலர் வருவதுமுண்டு. தம்மால் தான் அத்தகைய வெற்றியே பெற்றார்கள் எனப் பிறர் வெற்றியில் பங்குபற்ற விரும்பும் இவர்களால் ஏன் தம்மால் அத்தகைய வெற்றியைப் பெற முடியாமல் போனது என எண்ண நேர்ந்தால் வெற்றியாளரின் நேர்மையும், உழைப்பும், விடாமுயற்சியுமே அவர்களின் வெற்றிக்குக் காரணம் என உணர முடியும்.

ஒருவரின் வெற்றிக்கு இன்னொருவர் உறுதுணையாக இருப்பாரானால் அவரின் வெற்றியில் மற்றவரால் மகிழ்ச்சியடைய மட்டுமே முடியுமே தவிர் அந்த வெற்றிக்குத் தாம் காரணம் எனவோ, நற்பேறு எனவோ கூற உள்ளம் ஒத்திசையாது.

வாய்ப்புகள் எல்லோருக்கும் சமமாக இருப்பதில்லைதான் என்றாலும் ஏதோவொரு வகையில் தமக்கான வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துபவர்கள்தான் அதற்கான பலனைப் பெறுகிறார்கள்.

வாழ்க்கையில் முன்னேறிச் செல்பவர்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவாலே பொறாமை நிறைந்த மனிதர்கள்தான். தமக்குக் கிடைக்காதன இவர்களுக்குக் கிடைத்துவிட்டதே என்ற வயிற்றெரிச்சல் அவர்களைப் பலவிதத்திலும் ஆட்டுவிக்கும்.நம்மை ஏதோவொரு விதத்தில் வீழ்த்தி நாம் உடைவதைக் கண்ட பின்பே அவர்கள் உள்ளம் ஆனந்தக் கூத்



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

தாடும். அதை அவர்கள் வார்த்தைகளும் செயல்களுமே நமக்கு உணர்த்திவிடும்.

வெற்றிக் கனியை நோக்கிப் பயணித்த நீங்கள் உங்கள் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திய பின்பு செய்ய வேண்டியதெல்லாம் இத்தகைய மனிதர்களிடத்திலிருந்து உங்களை உடையாவண்ணம் செதுக்கிக் கொள்தல்தான்.

உங்களது வளர்ச்சி பிறரின் பாராட்டுகளால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று நினைக்காதீர்கள். உங்கள் உழைப்பை நம்புங்கள், உங்கள் முன்னேற்றத்தை மதியுங்கள். பிறரின் விமர்சனங்கள் உங்கள் நம்பிக்கையை தளரச் செய்ய அனுமதியளிக்காதீர்கள்.

பொறாமை நிறைந்த மனிதர்களின் செயல்களுக்குப் பதிலடி கொடுக்க நினைக்காமல் அமைதியாகக் கடந்துவிடுங்கள். அவர்களை நம்மால் மாற்ற முடியாது. அதற்கான நேரத்தை உங்கள் வெற்றியை உயர்த்துவதில் செலவிடுங்கள்.

பொறாமை கொண்டவர்கள் அதிகமான நேரத்தை உங்களுடன் செலவிட முடியாத சூழ்நிலையை உருவாக்குங்கள். நேர்மறையான மக்கள், நல்ல நண்பர்கள், உங்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் சூழ்நிலையை உருவாக்கினால், அவர்கள் தாமாகவே விலகி விடுவார்கள்.

இவர்கள் நம்மைப் பார்த்துப் பொறாமை கொள்கின்றார்கள் என்று நினைத்தால் அவர்களிடமிருந்து உங்களுக்குத் தேவையான பாடத்தை எடுத்துக்கொண்டு அவர்களின் எதிர்மறையான விமர்சனங்களை வளர்ச்சிக்கான ஒரு தளமாக மாற்றுங்கள்.




வெற்றியும் வாய்ப்புகளும் ஒருவருக்கொருவர் தொடர்புடையவை. வாய்ப்புகளைக் கண்டு சிலர் மகிழ்வார்கள், சிலர் பொறாமை கொள்வார்கள். ஆனால், பொறாமை கொண்டவர்களை எதிர்க்க முயலாதீர்கள். அதற்குப் பதிலாக, உங்கள் பயணத்தைத் தொடர்ந்து, தன்னம்பிக்கையுடன் முன்னேறுங்கள். பொறாமையை வெற்றிக்கான எரிபொருளாக மாற்றுங்கள். வாய்ப்புகளில் வயிறெறிபவர்களுக்கான பதிலடியென்பது உங்கள் தொடர் வெற்றிகளாகவே இருக்கட்டும்.











# மிஸ்டர் மங்: நிலக்கிளி பாலமனோகரனின் புதிய நாவல்



ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நிலக்கிளி பாலமனோகரன் அவர்களுடைய படைப்பாக்க இலக்கியம் மற்றும், மொழிபெயர்ப்புப் பங்களிப்புகள் முக்கியமானவை. தமிழோடு ஆங்கிலம், டெனிஸ் ஆகிய மொழிகளை லாகவமாகக் கையாளும் மொழித்திறன் கொண்டவர்.


கடந்த மாசி மாதம் (15.02.2025) 'மிஸ்டர் மங்' எனும் அவருடைய நாவல் வெளியீட்டு நிகழ்வு முள்ளியவளை, தண்ணீரூற்றில் இடம்பெற்றது. பாலமனோகரன் அங்கிளுக்கும் நூலைப் பதிப்பித்து வெளியிடும் குமுழமுளை 'முழவம்' கலையகத்தின் பாலகாந்தன் பிரசன்னாவுக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துகள்.

பாலமனோகரன் அவர்கள் எங்கள் ஊர்க் காரரர். அப்பாவின் நெருங்கிய நண்பர். டென்மார்க்கில் இருந்து நோர்வேக்கு பல தடவைகள் வந்து சென்றவர். அப்பாவின் வீட்டில் தங்குபவர். நான் எதிர்பாராத தருணங்களில் எனது கவிதைகளை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்து அனுப்புபவர். இதுவரை குறைந்தது 30 வரையான என் கவிதைகளை மொழி பெயர்த்திருகின்றார். இப்படியாக எனக்கும் அவருக்குமான உறவு நெருக்கமானது. இது ஒரு நவீன புனைவு (Modern fiction) நாவல்.50 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. அரசியற் காரணங்களால் அது நூலுருப் பெறவில்லை. மிஸ்டர் மங்க் என்பது ஆண்டான் குளத்தில் வாழும் ஒரு குரங்கின் பெயர். அந்தக் குரங்குதான் இந்த நாவலின் மையப் பாத்திரம். அது ஆறறிவு படைத்த குரங்கு. அந்தக் குரங்கினால் மனிதர்கள் போலச் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் செயற்படவும் முடிகிறது. இந்த விடயங்கள் ஒரு ஆசிரியரால் அந்தக் குரங்கிற்குக் கற்பிக்கப்படுகின்றது. ஆண்டான் குள த்திலிருந்து நெடும்பயணம் ஒன்றினை



மேற்கொள்ளும் குரங்கின் பயண வழிப் பாதையிற் பற்பல சுவாரஸ்யமான அனுபவங்களும் சம்பவங்களும் நடந்தேறுகின்றன. குரங்கு ஒரு கட்டத்தில் வாரப்பத்திரிகை ஒன்றுக்கும் ஆசிரியாராக ஆகுகின்றது. அது கட்டுரைகளையும் எழுதுகின்றது. குரங்கின் எழுத்தாணி எவ்வகை விளைவுகளை உண்டுபண்ணுகின்றது எனவாகக் கதை நகர்கின்றது. இந்நூல் பற்றிய விரிவான கட்டுரை ஒன்றினை விரைவில் எழுதவுள்ளேன்.

பாலமனோகரன் ஈழத்தின் குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்களில் ஒருவர். முல்லைத்தீவின் தண்ணீரூற்று அவரது சொந்த இடம். புலம்பெயர்ந்து டென்மார்க் நாட்டில் வாழ்ந்து வருபவர். நிலக்கிளி அவரது முதலாவது நாவல் 1973இல் வெளிவந்தது. அவரது இலக்கிய வாழ்விற்கு அரைநூற்றாண்டுக்கு மேலான கால நீட்சி உண்டு. 1973இல் இலங்கையின் சாகித்ய மண்டல விருதினைப் பெற்றது அவரது முதலாவது நாவலான 'நிலக்கிளி'. தொடர்ச்சியாக பல நாவல்கள், சிறுகதை கள், மொழிபெயர்ப்பு மற்றும் ஓவியங்கள் ஆகிய படைப்பாக்க வகைமைகளுக் கூடாக இலக்கியத்திற்குப் பங்களித்து வருபவர். நிலக்கிளி, கனவுகள் கலைந்த போது, வட்டம்பூ, குமாரபுரம், நந்தாவதி ஆகியன இவர் எழுதிய நாவல்கள். இவற்றில் வட்டம்பூ 'The bleeding heart' என்ற தலைப்பில் ஆங்கில த்திலும் அவரால் மொழிபெயர்க்கப் பட்டு வெளிவந்திருந்தது. 2010இல் இதன் அறிமுக நிகழ்வு ஒஸ்லோவிலும் இடம்பெற்றிருந்தது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் நிலக்கிளி டெனிஸ் மொழியில் (Jordpapegøjen) வெளிவந்திருக்கின்றது.



ரூபன் சிவராஜா

தீபதோரணங்கள், நாவல்மரம் ஆகிய தலைப்புகளில் இவரது சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. நாவல்மரம் சிறுகதைத் தொகுதி டெனிஸ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிர டெனிஸ் - தமிழ் அகரா திக்கு இவரது பங்களிப்பு இருந்துள்ளது.

முருகர் குணசிங்கம் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வுநூல்களான இலங்கையில் தமிழர் - ஒரு முழுமையான வரலாறு - கி.மு 300 - கி.பி.2000),"இலங்கை தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பதோ ற்றம் பற்றியதோர் ஆய்வு" ஆகிய நூல்களைத் தமிழாக்கம் செய்தவர். தமிழ் நெற் TamilNet) இணையத் தளத்திற்கு பல வருடங்கள் செய்திகள், கட்டுரைகளை மொழி பெயர்த்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாலமனோகரன் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கி வரும் நீண்ட காலப் பங்களிப்பினை அடையாளப்படுத்தி-இலக்கியத்தின் செழுமைக்கும், மேன்மைக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக நோர்வே தமிழ்3 வானொலி அவருக்கு 2018 ஆண்டின் 'சங்கமம்' நிக ழ்வில் சிறப்பு மதிப்பளிப்பினை வழங்கி யது. ஈழத்தமிழ் சமூக பண்பாட்டு வாழ்வியலினதும், புலம்பெயர் வாழ்வியலின தும் பிரதிபலிப்பாக அமைந்த இவரது படைப்புகளும் எழுத்துகளும் தனித்துவ மானவை.





05 ஆம் பக்கத் தொடர்ச்சி... ஏன் வாங்குகின்றோம்?

காலங்களில் தேவையில்லாமல் செய்த செலவுகள் என்னென்ன? அந்த செலவை இந்த மாதத்தில் எப்படி குறைப்பது? போன்றவற்றை கவனத்தில் கொள்ள முடியுமானால் நல்லது. " impulse buying " எனப்படும் கண்ணுக்குப்பட்டதை எல்லாம் வாங்க நினைக்கிற மனநிலையினை இந்த சூப்பர் மார்கெட்டிகள் செய்துவருகின்றன என்கின்றன ஆய்வுகள்.

ஏதோ ஒரு உந்துதலில் வாங்கிவந்துவிட்டு, ஏன் ? எதற்காக? இதனை பொருட்களை வாங்கிவந்தோம்? என குற்றவுணர்விற்கு ஆளாகாமல் நிதானமாக நமது வாங்கும் திறனை மேம்படுத்திக்கொள்வதென்பது நம் எதிர் காலத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் நல்லது .

15 ஆம் பக்கத் தொடர்ச்சி... ரணிலின் சுயரூபத்தை

### தமிழ் இனப்படுகொலை மறுதலிப்பு ?

நீண்ட காலப் போரில் தமிழர் தாயகம் இலங்கை இராணுவத்தால் இடைவிடாமல் குண்டுவீசித் தாக்கப்பட்டது. பொது மருத்துவமனைகள் மீது ஷெல் வீசப்பட்டன. பல்லாயிரம் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். சரணடைந்த தமிழர்கள் அரச படைகளால் கொல்லப்பட்டனர். பச்சிளங் குழந்தைகள் தங்கள் தாய்மார்களின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டு காணாமல் போனார்கள். இது ஒரு இனப்படுகொலை இல்லை என்று இப்போது அதி மேதாவி ரணில் வாதிடுகிறார். தமிழ் இனப்படுகொலையை மறுக்க, திரித்து, நிராகரிக்க இலங்கையின் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக சர்வதேச அளவில் சிங்கள அரசு முயன்று வருகிறது. இது பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்கும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும், தற்போதைய அடக்குமுறை நிலையைப் பேணுவதற்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருதலாம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் கையாண்ட விதம் மற்றும் 1980 களின் பிற்பகுதியில் அவரது கண்காணிப்பின் கீழ் செய்யப்பட்ட சித்திரவதை குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சூடான விவாதம் இந்த நேர்காணலில் இடம்பெற்றது.

இலங்கையின் போருக்கு முந்தைய உண்மை மற்றும் சமரசம் குறித்து ஹசன், விடுதலைப் புலிகள் (LTTE) பக்கம் திரும்பியபோது, 2009 இல் முடிவடைந்த மோதலில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி வழங்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, இல்லை. எந்த சமூகத்திற்கும் நீதி இதுவரை வழங்கப்படவில்லை என்று மிக அப்பட்டமாகவே கூறியுள்ளார். அத்துடன் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் தடுக்கப்பட்டதையும், சில மருத்துவமனைகள் குண்டுத் தாக்குதல்களில் தாக்கப்பட்டதையும் அவர் ஒப்புக்கொண்டார்.ஆனால் அத்தகைய குண்டுவெடிப்புகள் முறையாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை என்பதை மறுத்தார்.

### போர்க் குற்ற ஒப்புதல் ?

ஐ.நா. குழுவின் கூற்றுப்படி, இலங்கை அரசாங்கப் படைகள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதைத் தடுத்தன என்று நேர்காணலில் ஹசன் கூறினார். அது தொடர்பில் பதிலளித்த போரின் இறுதிக் கட்டத்தின் போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்ரமசிங்கே, அது நடந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றார். அதேசமயம் அமெரிக்க வெளிவிகாரத் துறை போர்க்குற்றங்கள் செய்ததாக குற்றம் சாட்டும் ஜெனரல் சவேந்திர சில்வாவை, மீண்டும் இலங்கையின் ஆயுதப் படைகளுக்குத் தலைவராக நியமித்ததற்கான காரணம் குறித்தும் ரணில் விக்ரமசிங்க இதன்போது நேர்காணலில் வெளிப்படையாக தெளிவுபடுத்தினார். ஈழ மண்ணில் 2009 க்குப் பிறகும், இராணுவ ஆக்கிரமிப்பு, நில அபகரிப்புகள், கட்டாயமாக காணாமல் போதல்கள் என்று இனப்படுகொலை இன்னமும் தொடர்கிறது. மேலும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் அதன் தொடர்ச்சியில் உடந்தையாக உள்ளனர் என்பதை அவர் தன்வாயால் அருந்தருளிய செவ்வியிலேயே தெளிவாக தெரிவித்துவிட்டார். இனி! உலகமும் ஈழத் தமிழர்களுக்கு என்ன பதிலை, என்ன வியாக்கியானத்தை சொல்லப் போகுறது.

24 ஆம் பக்கத் தொடர்ச்சி... வாசனைத் திரவியம்

என்னை நோக்கி வந்தார். நாங்கள் வீட்டுக்குக் குடியேறிய பின்னர் முதன்முதலாக சந்திக்கின்றார். "என்ன உங்கள் வீடு ஒரே வாசமா மணக்குது?" வாசம் என்ற சொல்லைக் கொஞ்சம் அழுத்திச் சொன்னது போல் இருந்தது. அவரிடம் நான் நடந்த கதையைச் சொன்னேன்.

"ஓ" ஹாம்லின் நகரத்து பைபர் கதை போல் இருக்கின்றதே! அவர் எலிகளைக் கூட்டிச் சென்று ஒரு ஆற்றுக்குள் இறக்கிவிட்டார். நீங்கள் எலிகளை வீட்டை விட்டே துரத்தி விட்டீர்கள்.""நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?"

"நாலைந்து நாட்களாக எங்கள் வீட்டில் ஒரு எலிகளையும் காணவில்லை. இருபது வருஷத்து தொல்லை நீங்கியது" சொன்ன அவர் அந்த வாசனைத் திரவியத்தின் பெயரை ஒரு பேப்பரில் எழுதிக் கொண்டார்.

"இனி அந்த வாசனைத்திரவியத்தின் விற்பனை இன்னும் கூடப்போகின்றது" எனச் சிரித்தபடி, தன்னுடைய வீட்டுக்குச் செல்லாமல் முன் வீடு நோக்கிச் சென்றார் அவர்.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி... தாய்மார் ஆண்பிள்ளைகளில்

ஆண் குழந்தைகள் எல்லாம் தன்னுடைய தாயைத்தான் முதலில் காதலிக்கிறார்கள். இரண்டு மூன்று வயதில் இவளை ரசித்து இவள் எனக்கே எனக்குத்தான் என்று உரிமை கொண்டாடுகிறார்கள் இதை எடிபெஸ் காம்ப்ளெக்ஸ் என்பார்கள்.

01.ஒரு ஆண் மகன் முதலாவது நிலையில் தாயை இவ்வாறு உணர்கின்றான். இதுதான் முதலாவது நிலை. 2 ஆவது நிலை object contancy உல அதாவது தாய் கண்ணுக்கு முன்னே இல்லாவிட்டாலும் அம்மா என்னோடுதான் இருக்கிறாள். அவளைத் தேடத்தேவையில்லை என்று பிள்ளை நினைக்கும். 3 ஆவது நிலை நான் வேறு அம்மா வேறு என்று புரியும் நிலை Seperation – indivitualation. இந்நிலையில் தான் ஒரு தனிமகன் தனக்கு என்ற ஒரு வாழ்க்கை இருக்கிறது என்று புரிகின்ற நிலை. ஆனால், தாயானவள் தன்னுடைய மகனை முதலாவது நிலையிலேயே வைத்திருக்க நினைத்தால், தன்னுடைய பாதுகாப்புக்காகத் தன் மகனை வளர விடாமல் வைத்திருப்பது Persistent unbilical cord syndrom என்று சொல்லப்படுகின்றது. இப்போது எங்கே சந்ததி விருத்தி ஏற்படும். நான் உன்னைப் 10 மாதம் சுமந்தேன் என்னும் மந்திரத்தைப் பயன்படுத்துகின்ற தாயானவள், யானை தன் குட்டியை 22 மாதங்கள் சுமக்கின்றதே அதையும் நினைத்துப் பார்க்க வேண்டுமே. இந்தத் தாய்மை உணர்வானது குரங்குக் குட்டி,கெங்காரு என்று அனைத்து உயிரினங்களுக்கும் இருக்கின்றது. தான் மட்டுமே 10 மாதங்கள் தாங்குவதாக மனிதத்தாய் நினைத்தல் கூடாது. தொப்புள் கொடி வெட்டப்பட்டால், அக்குழந்தை தனி மனிதன் என்ற உணர்வைத் தாய் கொண்டிருக்க வேண்டும். ஆண்குழந்தை ஒன்று பிறக்க வேண்டுமானால், அங்கு தந்தைக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. தாய்க்கு X,X என்னும் இரண்டு குரோமோசோம்கள் மாத்திரமே இருக்கின்றன. தந்தைக்கு மட்டுமே X.Y என்ற குரோமோசோம்கள் இருக்கின்றன. எனவே தந்தையினுடைய Y குரோமோசோம் இருந்தால் மட்டுமே ஒரு ஆண்குழந்தையைத் தாயால் பிரசவிக்க முடியும். எனவே ஆண் குழந்தை பிறப்பதற்கு அம்மாவை விட அப்பா முக்கியம் என்னும் விடயத்தைத் தாய் கண்டுகொள்வதில்லை.

இந்தத் தாய் மகன் உறவினாலே தம்பதிகளின் உறவிலே விரிசல் ஏற்படுகின்றது. தன்னுடைய மனைவியைக் கணவன் தாயின் பேச்சைக் கேட்டு அடக்கி வைக்க முனைகின்றான். பாவப்பட்ட பெண்ணோ பொறுத்துக் கொண்டு அடிமையாக வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. கணவனுக்காக விதம் விதமாகச் சமைத்து வைத்துக் காத்திருக்கும் போது கணவன் தாய் வீட்டில் வயிறார உணவருந்திவிட்டு வருகின்ற போது ஏன் சாப்பிட்டுவிட்டு வந்தீர்கள்? என்று மனைவி கேட்கின்றாள்.அங்கு வாக்குவாதம் ஏற்பட்டு சண்டையில் முடிகின்றது. இங்கு ஆண் மகனின் தாய் வில்லி ஆகின்றாள். இங்கு பெண்ணுக்குப் பெண்ணே பிரச்சினையாகின்றாள்.






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# பாட்டினில் அன்புசெய்



## SRS தமிழ் வானொலி 6 ஆம் ஆண்டு விழா

கடந்த மாசி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை இலண்டனில் HILL HOUSE COMMUNITY CENTRE HILL HOUSE அரங்கில் SRS தமிழ் வானொலி 6ஆம் ஆண்டு விழா, இடம்பெற்றது. இந்த நிகழ்வினூடாக சேகரிப்பட்ட நிதி சத்துருக்கொண்டான் – மட்டக்களப்பு ஸ்ரீ ஞான சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை” அமைப்பின் கட்டிட நிதிக்காக வழங்கப்பட்டு, பாடசாலையின் கட்டிட வேலை துரிதமாக நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. SRS தமிழ் வானொலி உறவுகள் மற்றும் உதவிக்கரங்கள் நீட்டிய அனைத்து சேகரிக்கப்பட்ட நிதியினால் சத்துரக்கொண்டான் அற நெறி பாடசாலை கட்டிட நிதிக்கும், கொழும்பு அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியினால் “கலாசூரி” திவ்யா சுஜேன் அவர்களால் கதிர்காம ஆலயப்பணி கட்டிட நிதி திரட்டலுக்குரிய மாபெரும் சேவைக்கும் நம் குழுமத்தினாலும் சிறு உதவி இம்முறை செய்திட நம் குழுமத்தினால் “பாட்டினில் அன்புசெய்” மூலம் வழங்கவும் எமக்கு சந்தர்ப்பம் அமைந்தது மகிழ்ச்சியே..

பிரதம விருந்தினராக “கலாபூசணம்” “சங்கீதவித்துவான்” திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன் அம்மையார் அவர்களும், சிறப்பு விருந்தினராக பின்னனிப் பாடகி Super Singer பரீதா அவர்களும் இணைந்து சிறப்பித்தனர். SRS தமிழ் வானொலி 6ஆம் ஆண்டு நிகழ்வில் “இசைக் கலாமணி” “கலாபூஷணம்””சங்கீத வித்துவான்” திரு.ஐ. சங்கர நாராயணன் ஞாபகார்த்த விருது 2024” கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும் இடம் இடம் பெற்றது






குறிப்பிடத் தக்கது. இலங்கையை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் மட்டுமன்றி ஏனைய ஊடகத் துறையிலும் 50 ஆண்டுகள் வழங்கிய சேவையையும் வாழ்நாளில் ஆற்றிய சாதனைகளையும்வரவிருக்கும்காலமும்கொண்டாடும் வகையில் வாழ்ந்த ஒலிபரப்பு விற்பன்னர் சொற்கோ வி.என்.மதிஅழகன் அவர்களுக்கு “பொன்னொளி” விருதும் “கலாபூஷணம்””சங்கீத வித்துவான்”திரு. ஐ.சங்கரநாராயணன் அவர்களின் சிரேஷ்ட மாணவன், கலைஞர் திரு. அமல்ராஜ் பர்ணாந்து அவர்களுக்கு “சிரஞ்சீவி” விருதும், மட்டக்களப்பினை பிறப்பிடமாகவும் ஐக்கியராச்சியத்தை வதிவிடமாகவும் கொண்டு வாழ்நாளில் ஆற்றிய சாதனைகளுக்காக பல்துறைக் கலைஞர் திரு கோவிலூர் செல்வராஜன் அவர்களுக்கு “சிரஞ்சீவி” விருதும்,இலங்கையை பிறப்பிடமாகவும் நெரர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட அமுத மொழி கொணட் ஆளமை ஈழத்து எழுத்தாளர் திருமதி. பவானி சற்குணசெல்வம் அவர்களுக்கு “அமுதக்கதிர்” விருதும், சங்கீத வித்துவான் திருவாரூர் திருமதி. சீதாலட்சுமி சிவாஜி அவர்களுக்கு “நாதசுரபி”விருதும், கலைஞர் திருமதி. சரோஜினி செல்வகுமார் அவர்களுக்கு “நாதசுரபி” விருதும், கலைஞர் திருமதி. ராஜம் கிருஷ்ணசுவாமி அவர்களுக்கு “நாதசுரபி” விருதும், கலைஞர் திரு. கிரிதரன் கந்தசாமி அவர்களுக்கு “நாதசுரபி” விருதும், ஍சு஍ தமிழ் வானொலி கலைஞர் திருமதி.அமுதா ரவிஷான் அவர்களுக்கு “மதுரமதி” விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு SRS தமிழ் வானொலியின் சிறப்பு விருதுகளாக வானொலிக்கு வழங்கும் சிறப்பு சேவையை பாராட்டி



வானொலிக் கலைஞர்களையும் கௌரவித்து நிகழ்வு சிறப்பிக்கப்பட்டது. SRS தமிழ் வானொலி ஸ்தாபகர், உரிமையாளர் திரு. ரவிஷங்கர் சங்கரநாராயணன் (ரவிஷான்) அவர்களின் 40 ஆண்டு கால இசைப்பயணத்தை வாழ்த்தி பெரியோர்களினால் கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில், கர்நாடக மிருதங்க இசை, பரத நாட்டிய நிகழ்வுகள், கிராமிய நடனம், தமிழ் பேச்சு, குறு மேடை நாடகம், இன்னிசை கானங்கள் என பல் சுவை நிகழ்வுகளுடன் திரு. ரவிஷான் தலைமையில், திரு.ரமேஷ் கந்தசாமி திருமதி.நிறைஞ்சனா சுரேஷ்குமார் இருவரின் மேடைத் தொகுப்புடன் மண்டபம் நிறைந்த மக்களுடன் இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்று நிறைவேறியது. ■





அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# யேர்மனியில் தேர்க்காலம் 2025



## யேர்மனியில் ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள் 2025

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 23.05.2025 - தேர்: 31.05.2025
Hünefeld Str 63b
42282 Wuppertal

**யுலிச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்**
Tel:02164 70 20 944
கொடி: 17.05.2025 - தேர்: 25.05.2025
Hoch str 10 b; 41363 Jüchen.

**சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel: 0176 434 424 39, 7011 365 66 224
கொடி: 07.06.2025 - தேர்: 15.06.2025
Lehmfeld Str 18 70374 Suttgart

**கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061, 01577 36 63 939
கொடி: 07.06 2025 - தேர்: 15.06.2025
Gottwald Str 23 45525 Hattingen.

**ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 09.06.2025 - தேர்: 22.06.2025
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 05.07.2025-
தேர்: 13.07.2025
Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 28.06.2025 - தேர்:06.07.2025
Klefer Str 24, 44225 Dortmund



**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேலழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 12.07.2025 - தேர்: 20.07.2025
Roon Str 2 a; 59065 Hamm

**பிறாங்போட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி:29.06.2025 - தேர்:12.07.2025
Adelbert 61-63; 60486
Frankfurt/M. 069 979 45 618.

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 5015 964, 0176 3015 2913
கொடி: 24.06.2025 - தேர்: 29.06.2025
Industrie Str 7; 51643 Gummersbach

**சுட்காட் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 0711 470 30 47
கொடி: 18.07.2025 - தேர்: 27.07.2025
Waiblnger Str 30; 70372 Suttgart

**நூறென்பேர்க் சித்திவிநாயகர் ஆலயம்.**
Tel: 0911 439 586 07
கொடி: 29.04.2025 - தேர்: 04.05.2025
Humbold Str 103. 90459

**கிர்ஸ்கெம்ரெக் கனகதுர்க்க அம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 25.07.2025 -
தேர்: 03.08.2025
Alleen Str 18-20 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02381 162 686
கொடி: 26.07.2025 - தேர்:03.08.2025
Ferdinand poggel Str25, 59065 Hamm

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்**
Tel: 030 694 6900, 0171 526 73 07
கொடி: 29.07.2025 - தேர்: 21.08.2025
Blaschko Alle 48; 12355 Berlin.

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 15.08.2025 -
தேர் : 25.08.2025
Hauskam Str 58; 45476 Muelheim/Ruhr

**பிறீமன் வரசித்தி விநாயகர் ஆலயம்**
Tel: 0421 247 966 58
கொடி 08.08.2025
தேர் 17.08.2025
Ilse Kaisen Str 24. 28327 Bremen.

**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்**
Tel: 0511 471 149, 0151 74 21 89 05.
கொடி: 25.07.2025 - தேர்: 03.08.2025
Carl- Buderus Str 3a; 30455 Hannover.

**கைபுறோன் கந்தசாமி கோவில்**
அலங்காரத் திருவிழா. 17.05.2025
தேர்: 25.05.2025
Siemens Str 11; 74177 Bad friedrichshall.
ஆலயம் : 07136 270 62 44
மதிவாணன் : 0176 603 61 624



# மீண்டும் இணையும்

## ரஜினி - கார்த்திக் சுப்பராஜ்



வேட்டையன் திரைப்படத்தைத் தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கூலி படத்தில் நடித்துள்ளார் ரஜினிகாந்த்.

இப்படம் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அல்லது தீபாவளிக்கு ரிலீஸாகும் என்று கூறப்படுகிறது.

தொடர்ந்து ஜெயிலர் 2 படத்திலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் ரஜினியின் அடுத்த படம் குறித்த அப்டேட் வெளியாகியுள்ளது. ரஜினியின் அடுத்த திரைப்படத்தை கார்த்திக் சுப்பராஜ் இயக்கவுள்ளதாகவும் வேல்ஸ் பிலிம் இன்டர்நெஷனல் தயாரிக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே 2019 ஆம் ஆண்டில் கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய பேட்ட திரைப்படத்தில் ரஜினிகாந்த் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லியோ கதையா அஜித் படம்?



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில், ஜிவி பிரகாஷ்குமார் இசையமைப்பில், அஜித், த்ரிஷா மற்றும் பலர் நடிக்கும் படம் குட் பேட் அக்லி. இப்படம் அடுத்த மாதம் ஏப்ரல் 10ஆம் திகதி வெளியாக உள்ளது. அஜித்தின் முந்தைய படமான விடாமுயற்சி தோல்வியடைந்ததால் இந்தப் படத்தை அஜித் ரசிகர்கள் பெரி தும் எதிர் பார்க்கிறார்கள்.

இந்நிலையில் இப்படத்தின் கதைச் சுருக்கம் வெளியாகி உள்ளது. "ஒரு தாதா அவருடைய வன்முறை வாழ்க்கையிலிருந்து விலகி, தனது குடும்பத்துடன் அமைதியாக வாழ முயற்சிக்கிறார்.

ஆனால், கடந்த காலத்தில் அவர் செய்த மிருகத்தனமான செயல்கள் அவரைப் பின் தொடர்கின்றன. அவற்றை நேருக்கு நேர் எதிர்கொள்ளத் தயாராகிறார்," என்பதுதான் அந்த கதைச் சுருக்கம்.

அதைப் பார்த்ததுமே அனைத்து ரசிகர்களுமே விஜய் நடித்து வெளிவந்த லியோ படத்தின் கதையும் இதுதானே என்று கருத்துக்கூறி வருகிறார்கள்.



# ஜெயலலிதாவை

## பாடகியாக்கிய மகாதேவன்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அன்றைய லேடி சூப்பர் ஸ்டார். அவரும் எம்ஜிஆரும் இணைந்து நடித்து விட்டால் அந்த படம் வெள்ளிவிழாத்தான்.

இப்படியான காலத்தில் அவரை பாடகியாகவும் அறிமுகம் செய்தார் கே.வி.மகாதேவன். 1969ஆம் ஆண்டு வெளிவந்த அடிமைப்பெண்' படத்தில்தான் ஜெயலலிதாவின் பாடகி அறிமுகம் நடந்தது. பல வருடம் சிறையில் இருந்து மீண்ட எம்ஜிஆருக்கு அவரது தாயின் அன்பை சொல்லும் பாடலாக உருவானதுதான் "அம்மா என்றால் அன்பு" இந்த பாடலை முதலில் பி.சுசீலாதான் பாடுவதாக இருந்தது.

ஆனால் படத்தில் ஜெயலலிதா இந்த பாடலுக்கு நடிப்பதால் அவரே பாடினால் நன்றாக இருக்கும். கணீர் குரலுக்கு சொந்தக்காரரான ஜெயலலிதான அன்பு பெருகும் ஒரு பாடலை பாடினால் வித்தியாசமாக இருக்கும் என்று கருதிய கே.வி. மகாதேவன் அவரையே பாட வைத்தார். அதன் பிறகு ஜெயலிதா ஓ மேரா தில்ருபா (சூரியகாந்தி), கண்களில் ஆயிரம் ஸ்வீட்ட்ரீம் கன்னம் இரண்டும் ஐஸ்க்ரீம் (வந்தாளே மகராசி) .உலகம் ஒருநாள் பிறந்ததுஅது ஊமையாகவே இருந்தது (திருமாங்கல்யம்), சித்திர மண்டபத்தில் சில முத்துகள் கொட்டி வைத்தேன் (அன்பைத் தேடி) உள்ளிட்ட பல பாடல்களை பாடினார்.

# அனுபமாவுடன் சமந்தா



டிராகன்' படம் மூலம் தமிழ் சினிமாவில் தனது வெற்றியை பதிவு செய்திருக்கிறார் நடிகை அனுபமா பரமேஸ்வரன். இதையடுத்து 'பர்தா' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப் படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி, ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பர்தா அணியும் கிராமத்து பெண்களின் நிலையை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படம், தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் விரைவில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், இந்தப் படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிகை சமந்தா நடித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால், இப்படத்திற்குக் கூடுதல் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, அனுபமா சமந்தா இருவரும் இணைந்து நடித்த 'அ ஆ' என்ற தெலுங்கு படம் நல்ல வரவேற்பை பெற்றது

# சரக்கு தீர்ந்து விட்டதா?



சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் விஜய் சேதுபதி பேசும்போது ,நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் வெளியான 'மகாராஜா' திரைப்படம் தமிழ் சினிமாவை தாண்டி இந்திய சினிமாவை தாண்டி சீன ரசிகர்களையும் இந்த அளவுக்கு கவரும் என கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அந்த படத்துக்கு ரசிகர்களாகிய நீங்கள் கொடுத்த மிகப்பெரிய அன்புக்கு எப்போதும் நன்றி கடன் பட்டுள்ளேன். இப்படி ஒரு கதையை எழுதி, அந்த கதாபாத்திரங்களை நடிகர்களுக்குள் புகுத்தி தான் விரும்பிய படி படத்தை இயக்கிய நித்திலனுக்கு எப்போதுமே நன்றிக் கடன் பட்டுள்ளேன்,

நடித்த படங்கள் சரியாக போகாத நிலையில், விஜய் சேதுபதி அவ்வளவுதான் அவரிடம் சரக்கு தீர்ந்து விட்டது என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். ஆனால், மகாராஜா விஜய் சேதுபதி என 'மகாராஜா' படம் என்னை மீண்டும் தூக்கி நிறுத்தியதும் சினிமாவுக்கு உண்மையாக இருக்கும் கலைஞனை சினிமா பாதுகாக்கும் என்பதை புரிந்துக் கொண்டேன் என்று கூறியுள்ளார்.

















அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்